திராவிடநாடு

2 அணா

அவர்கள் பாதை!

கவலை வந்துவிட்டது, கிருஷ்ணசாமிக்கு; 'இந்து'வில் எழுதுகிறார்—கவலையோடு அழைக்கிறார், அவர் மக்களை.

சங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டுமாம் — அதன் சார்பில் இரண்டு மூன்று பேரைக் கப்பலேற்றி கடல் கடந்த நாடுகளுக்கு அனுப்பவேண்டுமாம்.

மூலச் செலவுக்கு ரூபாய் பத்தாயிரம் செலவழியும்—பிறகு, மாதாமாதம் ரூபாய் நாலாயிரம் தேவைப்படும்—மொத்தத்தில் ஒரு இரண்டு லட்ச ரூபாய்கள் இருந்தால்போதும், என்றும் திட்டமிட்டுத் தெரிவிக்கிறார், அவர்.

இந்தோனேஷியாவுக்குக் கட்டுப்பட்ட பாலி எனும் தீவில், மக்கள் பலர் இந்து மதத்தவர்களைப்போல இருக்கிறார்களாம் — இராமாயணம் இருக்கிறதாம் அவர்களிடம்—சாயல்கள் யாவும் இந்துக்களாகவே இருக்கின்றதாம். அவர்கள் எப்படியெப்படி வேதாந்த முறைகளை அனுஷ்டிக்கவேண்டும் — சர்வேஸ்வரனை அடையவும்; சனாதனக் கோட்பாடுகளைக் காப்பாற்றவும் என்னென்ன செய்யவேண்டும், என்கிற சரியான பாதைகளை அறியாமலிருக்கிறார்களாம். அவர்களுக்கு வேத விளக்கங்களை அளித்து, கர்மவினைபோக்கும் மார்க்கத்தைக் காட்ட சங்கமும், பணமும் வேண்டுமாம்! "இந்துமதம் இந்தியாவைவிட்டு பல இடங்களில் இல்லையென்பது அறியீரோ! ஏதோ பாலித் தீவு போன்ற ஒன்றிரண்டு தீவுகளில்தானே ஒட்டிக்கொண்டிருக்கிறது. அதனைச் செப்பனிட்டுச் சீர்திருத்தம் செய்யவேண்டாமோ," என்று கேட்கிறார், கிருஷ்ணசாமி, 'இந்து'வில் தீட்டியிருக்கும் நீளமானதோர் கடிதத்தில்.

படங்களில் பார்க்கிறோம், பாலித்தீவையும் அங்கு வாழும் மக்களையும். நாகரீக ஒளிபரவவில்லையென்பதும், அறியாமை இன்னும் அரசோச்சுகிறதென்பதையும் அறிய முடிகிறது, அவைகள் மூலம். அங்குள்ள மக்களுக்கு, கர்மவினை போக்கும் வழிகாட்ட, சென்னை கிருஷ்ணசாமியார் பணமும் சங்கமும் கேட்கிறார்.

"சரி! சனாதன முறைகளைப்பற்றி அவர்களுக்கு விளக்கிடும் வாய்ப்பு கிடைக்கிறது—செந்தமிழின் சிறப்பினைப் பற்றியும், திருவாசகமும் தேவாரமும் பொழியும் கருத்துக்களைப் பற்றியும் அறிவிக்கலாம் என்று எண்ணவில்லை அவர்.

தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். பணம் கிடைத்துவிட்டால், பாலித் தீவுக்கு அனுப்பப்படும் அந்த இரண்டு மூன்று பேரும் யாராகயிருக்கவேண்டுமாம், தெரியுமா? அசல் பார்ப்பனர்களாகயிருக்க வேண்டுமாம்! அதுவும் அசல்—கொஞ்சங்கூட போலி கலந்ததாயிருந்துவிடக் கூடாதாம். சம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்யம் பெற்றவர்கள் தேவையாம்.

சரி! பாண்டித்யம் பெற்றவர்களும் கிடைத்துவிட்டார்கள், பாலித்தீவுக்குக் கப்பலும் போய்ச் சேர்ந்துவிட்டது! பாண்டித்யம் பெற்றவர் வெளுக்கிறார், சம்ஸ்கிருதத்தில், வேத விஷயங்களை. ஆனால், அதனைப் புரிந்துகொள்ள வேண்டுமே, அங்கிருப்போர்! அவர்களுக்குப் பாலிமொழிதானே தெரியும்—அதனால், பார்ப்பனர்கள் சொல்லுவதை பாலித்தீவினருக்கும், பாலித்தீவினர் கேட்கும் ஐயவினாக்களை இவர்களுக்கும் எடுத்துச் சொல்ல ஒரு நல்லமொழி பெயர்ப்பாளரும் வேண்டுமாம்.

அந்த மொழி பெயர்ப்பாளர் மூலம், செல்லும் திருத்தூதர்கள்—வேதங்களுக்கும் விளக்கங்கள் — இந்துமதம் என்றால் என்ன-அதன் கடவுள்களை வணங்குவது எப்படி, என்கிற விஷயங்களை எடுத்துப் புகட்டவேண்டுமாம்.

யாருக்குத் தெரியுமா? பாலித்தீவில் கர்மவினைகளை உணராத கசடர்களாயிருக்கும் அவர்களுக்கல்ல! அவர்கள் மத்தியிலேபோய், இந்த விஷயங்களை எடுத்துரைக்க அல்ல பணமும், ஆளும், சங்கமும். அப்படிச் சொல்லத் துவங்கினால், ஏற்படும் ஆபத்தையும் எச்சரிக்கிறார், கிருஷ்ணசாமி! இவர்கள்போய் நான்முகன் நாவில் வாழும் நாமகள் பற்றியும், நான்கு வேதங்களின் மகாத்மியங்களையும் மக்களிடம் சொல்ல ஆரம்பித்தால் அங்குள்ள புரோகிதர்கள் சும்மாயிருப்பார்களா? உடனே தோள் தட்டிக்கொண்டு கிளம்பி, 'ஏ! ஜனங்களே, இந்தியாவிலிருந்து வந்திருக்கும் சில அந்நிய மதத்தாருடைய பேச்சைக் கேட்காதீர்கள். அவர்கள் நிரீசுரவாதிகள்! நமது கோட்பாடுகளைக் குறைகூறும் ஆசாமிகள்!! நான் சொல்வதுதான, நமது நாதனுக்கேற்ற முறை. மீறினால், நரகம் தான் கிட்டும். சொர்க்கம் கிடைக்காது" என்று சொல்ல ஆரம்பிக்கத்தானே செய்வார்கள்! இதுதானே, எங்குமிருக்கின்ற புரோகிதர்களின், சுபாவமும்—இதை அறியாரா, இவ்வளவு அருமையான யோசனையைச் சொல்லும், கிருஷ்ணசாமி. அதனால், அது பற்றியும் எடுத்துச் சொல்லி, செல்லுவோர் முதலில், பாலித்தீவிலிருக்கும் புரோகிதர்களைச் சந்தித்து, அவர்களுடன் கூடிப் பேசி திட்டம் ஒன்று தயாரித்து, பாதையைச் செப்பனிடவேண்டும் —னத் தெரிவிக்கிறார்.

பாலித்தீவுப் புரோகிதர்கள் — பெயர் பேடாண்டாஸ் — இங்குள்ள பார்ப்பனரைப் போலத்தான் இருப்பார்கள்போலும். ஏனெனில் அவர்கள்தான், இங்கே உயர் சாதியினராம்! அவர்களுடன் கூடிப்பேசி, அவர்கள் மூலம் இந்து மதத்துக்கு செல்வாக்கு உண்டாக்க வேண்டுமாம்.

'ஏஜண்டுகள் நியமிப்பது', என்பர் இதனை, வியாபாரத் துறையில்.

புரோகித புரியினரும், 'ஏஜண்டுகளை' ஏற்படுத்த யோசனை சொல்லுகிறார், கிருஷ்ணசாமி.

மக்கள் எக்கேடு கெட்டாலென்ன மார்க்கம் செழிக்கவேண்டும்—

தீர்த்துவைத்தார்!

டிராம் பிரச்னையைக் காமராஜர் ஆட்சிக்கு வந்தவுடன் தீர்த்துவைப்பார் என்று கூறப்பட்டது. ஆனால், நீண்ட நாட்களாக அந்தப் பிரச்னை, 'ஜவ்வு' போல இழுத்துக்கொண்டே இருந்தது. ஆனால், காமராஜரா விடுபவர்! பிரச்னையைத் தீர்த்துவைத்தே விட்டார்! டிராம்களை விலைக்கு வாங்கிய பம்பாய் கம்பெனி, அவைகளை மே மாதம் பத்தாம் தேதி, உடைத்துத் தூளாக்கிக் குவித்தன!

முகப்பில்......

இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு பிரிட்டனை ஆளும் வாய்ப்பைப் பெற்றுவிட்டார், ஈடன்.

அட்லி கட்சியைவிட, சர்ச்சிலின் கன்சர்வேடிவ் கட்சி 24 இடங்களை அதிகமாகக் கைப்பற்றி 630 உறுப்பினர்கள் நிரம்பிய பார்லிமெண்டிலே அமரப் போகிறது.

கடந்த தேர்தலைவிட, வோட்டுகள் எண்ணிக்கையிலும், உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும், அட்லி கட்சி அதிக அளவில் 'கோட்டை' விட்டிருக்கிறது.

ஆச்சாரியார் இங்கிருந்தபடி 'மான்செஸ்டர் கார்டியன், மூலம் ஆதரவளிக்க வேண்டுகோள் விட்டாரே ஆக்லாந்து என்பவரை ஆதரிக்குமாறு. அந்த ஆக்லாந்து படுதோல்வி அடைந்திருக்கிறார்! அவர், சுயேச்சையாக நின்றாராம்!!

பிரிட்டனின் பிரதமராகியுள்ள ஈடனுக்கு ஏராளமான பிரச்னைகள்-உள் நாட்டிலும், உலகிலும் -இருக்கின்றன, சமாளிப்பதற்கு. என்ன செய்யப்போகிறார் என்பதை எதிர்காலம்தான் சொல்ல வேண்டும்.

அதனை நம்பி வாழும் இனம் வளமாகவேண்டும் — இதற்கு எந்த இடையூறும் வரக்கூடாது, எனும் சுயநலம் புரோகிதபுரியின் பரம்பரைக் குணம் என்பதை வெளிப்படுத்துகிறது, இந்த விசித்திர யோசனை.

மலேயாவிலும், பர்மாவிலும், இலங்கையிலும் தவிக்கும் எண்ணற்றமக்களின் துயர் களையும் வழிவகைகளைக் காண எண்ணம் ஏற்படும் உங்களுக்கும் நமக்கும்.

ஆனால், கிருஷ்ணசாமிகளுக்கு, அப்படி ஏற்படுவது கிடையாது— அவர்களுக்கு மதமும், மார்க்க போதனைகளும்தான், முக்கியமாகத் தென்படுகிறது.

இதுதான் நமக்கும் அவர்களுக்குமுள்ள பெரிய வித்தியாசம்.

அப்படி மார்க்கபோதனை செய்யப்பட வேண்டுமென்றாலும் அதற்கு லாயக்கானவர்கள் பார்ப்பனர்கள்; அதற்குள்ள தகுதி சம்ஸ்கிருதம் தெரிந்திருக்கவேண்டும், என்று நிபந்தனைகள் வரையறுக்கப்படுகிறது.

இதேபோல நாமும் வரைதுறைகளைச் செய்யக்கிளம்பி, திராவிடர்களுக்கென சில உரிமைகளும் சலுகைகளும் அளிக்கப்படவேண்டும், தமிழ் வாழவேண்டுமெனச் சொன்னால் உடனே நம்மைப் பார்த்து, நாஸ்திகா! பேதமூட்டுபவனே! பித்தா! என்று பேச ஆரம்பித்து விடுகின்றனர்.

பாலித் தீவுப் புரோகிதர்களுக்கும்—இங்குள்ள புரோகிதர்களுக்குமிடையே "பாலம்" அமைக்க பணமும் ஆளும் கேட்கிறாரே, கிருஷ்ணசாமி— அவர், ஒருவேளை, சங்கராச்சாரியாரின் இடத்திலிருப்பவரோ; அகோபில மடத்துக்கு அடுத்த ஜீயராக வரவேண்டியவரோ; சம்சாரம் துறந்து சன்யாசம் பெற்றவரோ அல்ல—சென்னை மாளிகை வாசி!

லெப்டினன்ட் கர்னலாம்—குறிப்பிடப்பட்டிருக்கிறது,'இந்து'வின் கடிதத்தில்.

எந்தப்பதவி வகித்தால் என்ன!- அவர்கள், அணுகுண்டு ஆராய்ச்சியும் செய்ய முடிகிறது—அரசமரத்தடி உபதேசமும் நடத்தமுடிகிறது. எந்தப்பதவியிலிருந்தாலும், கடைசியில் மதமார்க்கமும், மனுமாந்தாதி வழிகளைக் காப்பாற்றுவதுமே முதலாய கடன் என்று கருதுகின்றனர்.

எங்குபோனாலும், எப்படியானாலும், எந்த உத்தியோகத்தைப் பார்த்தாலும், சனாதனத்தைக் காத்திடும் பண்புமட்டும் போவதில்லை, பார்ப்பன குலத்துக்கு.

இதைச் சொன்னால், நம்மிடம் சீறுகிறார்களே நம்மவர்கள்— அவர்களது பார்வைக்குக் கொண்டு வருகிறோம், கிருஷ்ணசாமிகளின் செயலையும் சிந்தனையையும்.

★

அரசியல் கருத்துக்கள்,

தொடர் கட்டுரை

அடுத்த இதழில்

வெளிவரும்.

ஐதராபாத்திலும்....!

—★—

"வடக்கேயிருப்பவர்கள், தென்னாட்டு மொழியை எங்கே மதிக்கிறார்கள்? மதிக்காதது மட்டுமா! கொஞ்சங்கூட தென்னாட்டிலிருப்பவர்களின் மொழியைவிடச் சிறப்பில்லாத ஒருவிதமான இந்தியைத் திணிக்கவேண்டுமென முயற்சிக்கிறார்கள். மற்றவர்களை, சரிசமமாக நினைக்கும் பெருந்தன்மை எங்கேயிருக்கிறது வடக்கிலிருக்கும் இந்தி வெறியர்களுக்கு?"

பி. ராமகிருஷ்ணராவ் எனும் ஐதராபாத் முதலமைச்சர், மே 22 அங்கு நடைபெற்ற தட்சிணபாரத இந்திபிரச்சார சபையின் கூட்டத்தில், இவ்வண்ணம் எடுத்துரைத்திருக்கிறார் அக் கூட்டத்தில் பேசிய தியாகராய நகர் வாசி, தட்சிண இந்திப் பிரசார சபைக் காரியதரிசி சத்ய நாராயணா என்பார் சொன்னாராம், "தமிழ் நாட்டில், இந்திக்கு எதிர்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுவதெல்லாம் முழு உண்மையல்ல. இந்தி வேண்டாமெனப் பகலில் கருப்புக் கொடி பிடிப்பவர்களே இரவில் இரகசியமாக இந்தி படிக்க வருகிறார்கள்" என்று! இந்திப் பிரச்சார சபைக் காரியதரிசி அல்லவா? வேறென்ன பேசுவார்! கித்தாப்புக்காக, இப்படியொரு வெடியைக் கொளுத்திப் போட்டிருக்கிறார். அதைக் கேட்டபிறகே, ஐதராபாத் முதலமைச்சர் தலைப்பில் கண்டதுபோல இடித்துரைத்துரைத்திருக்கிறார். "ஐதராபாத்... ஆகவே, ஏதோ சொல்லிவைப்போம்,' என்பது சத்ய நாராயணா எண்ணம்.

"இந்தி எதிர்ப்பு தமிழ் நாட்டில் மட்டுமல்ல எங்கும் இருக்கிறது, அதற்குக் காரணம் வடநாட்டாரின் மொழி ஆதிக்க வெறி," என்கிற உண்மை, எல்லோருக்கும் தெரியும் என்று இடித்துரைத்திருக்கிறார், முதலமைச்சர். மறந்துவிடவேண்டாம், ஐதராபாத்தை ஆளுவது காங்கிரஸ் கட்சிதான்! ராமகிருஷ்ணராவும் ஒரு தேசியத் தலைவர்தான்!

மக்கள் கரமும் மன்னன் சிரமும்

மக்கள் கரம், மன்னன் சிரத்தையும் கொய்திடும் வலிவு பெற்றது.

அது ஏர் பிடிக்கும், துலாக்கோல் பிடிக்கும், கூப்பும், தழுவும், வரி செலுத்தும், வணக்கம் கூறும் —ஆனால் தாங்கொணாத கொடுமைசெய்து, உரிமையைப் பறித்திடக் கொடுங்கோலன் கிளம்பினால், அந்தக் கரம், அவன் சிரம் அறுக்கும்.

சார்லஸ் மன்னன் சம்பவம், இதைக் காட்டும் பயங்கரப் பாடம்.

பாராள்வோர் எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டிய பாடம்!

அந்தக் காதை, தொடர் கட்டுரையாக இங்கு தரப்படுகிறது.

சி.என்.அண்ணாத்துரை.

மக்கள்—எவ்வளவுதான் ஆராய்ச்சியுடன் பொருள் அறிய முயன்றாலும், எளிதிலே முழுப் பொருளும் புலனாகாத வகையிலே உள்ளதொரு ஒப்பற்ற சொல் — ஒவ்வொரு கோணத்திலிருந்து பார்க்கும்போதும் ஒவ்வொரு வகையான பொருள்! ஒரு நோக்குடன் காணும்போது கிடைக்கும் பொருள், பிறிதோர்நோக்குடன் காணும்போது கிடைப்பதில்லை. கையில் ஊமையராகத் தோன்றுவர் சில சமயம்; கண்ணில் ஊமையரோ என்றெண்ணம் பிறக்கும் வேறோர் வேளையில்! ஏதுமறியாதார் என்றுரைக்கத் தோன்றும் சில சமயம் — எதையும் துருவிப் பார்த்தறியும் திறன் மிக்கவராகக் காட்சி அளிப்பர் வேறு சமயத்தில். பசி தீர உண்பதும் உறங்குவதுமே அறிவர் என்று கூறத் தோன்றும் சில சமயம் — உயிர் வெல்லமல்ல என்றுரைத்துக் கிளம்பும் இலட்சியப் பொறி, சில சமயம் கண்களில் கிளம்பும். எளிதல்ல, இதன் பொருள் அறிதல்! அறியாதிருத்தலே பேராபத்து! மக்கள் என்ற சொல்லின் பொருளிலே உள்ள ஆழமும் செறிவும், ஒருவருக்கும் முழுவதும் புலனாகாதது மட்டுமல்ல, அந்தப் பொருள், வளர்ந்தவண்ணமுமிருக்கிறது. நாட்டின் நிலைமைகளுக்கேற்ப, காலத்தின் தன்மைக்கேற்ப, இதன் பொருள் வளருகிறது; மிளருகிறது. அதேபோல இந்தப் பொருள், நாட்டு நிலைமையையும் காலத்தின் போக்கையும் மாற்றிவிடவும் செய்கிறது. மின்னும் வாளுக்கும், பாயும் அம்புக்கும், வீசும் வேலுக்கும், எறியும் ஈட்டிக்கும், இன்னின்ன முறையிலே பயனாகும்போது இன்னின்ன விதமான விளைவுகள் ஏற்படும், என்று போர்முறை வல்லார் கூறிடல் காண்கிறோம் — ஆனால், மக்கள்பற்றி இதுபோல, மதத் துறையினராயினும், ஆட்சி மன்றத் துறையினராயினும், வகுத்துக் கூறிட இயலுவதில்லை. தத்தமது அறிவுத் திறனுக்கு ஏற்றபடியும், எண்ணத்துக்குத் தக்கவாறும், பொருள் கொள்வர்; அவர் கொண்ட பொருள், குறையுடையதாகவும், தவறுடையதாகவும் இருந்திடும்போது, எதிர்பாராத நிகழ்ச்சிகள் வெடிக்கின்றன, எவருடைய ஆற்றலையும் அழித்தொழிக்கும் 'வலிவு கிளம்புகிறது. ஆழமான பொருள்! ஆபத்தான விளைவுகளைத் தரத்தக்க ஆற்றலை உள்ளடக்கிய சொல்! பொருள் அறிதல் எளிது என்றெண்ணி, தனக்குத் தோன்றிய பொருளே, முழுப்பொருள் என்று நம்பிக்கொண்டு, அதற்கேற்ற வண்ணம் செயல்பட முனைபவர், இறுதியில் பெரும் கஷ்டமடைகின்றனர்; வரலாறு எடுத்துக்காட்டும்உண்மை இது. பல மன்னர்கள் தம் முடியை இழந்துள்ளனர்; ஒரு மன்னன், தன் சிரத்தையே இழந்தான்! அவன் செய்த ஒரே தவறு, மக்கள் என்ற சொல்லின் பொருளை, தவறாகப் புரிந்துகொண்டதுதான்! அந்தத் தவறுக்காக, முதலாம் சார்லஸ் என்ற பிரிட்டிஷ் மன்னன், தன் தலையை இழந்தான். மக்கள் என்ற சொல்லின் பொருளை, அறிவதற்கு முழு ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும் — எப்போதும் விழிப்புடன் இருந்து, பொருள் வளர்கிறதா, மாறுகிறதா, என்பதைக் கவனித்தவண்ணம் இருக்கவேண்டும் என்ற பாடத்தைத் தரும் பயங்கரமான சம்பவம், சார்லஸ் மன்னன் கதை.

தூங்கும் புலி! என்று உவமை கூறுவர் மக்களுக்கு. குருடன் அதன் மீது இடறினால், கொல்லப்படுகிறான். அதுபோலவே கருத்துக்குருடர்களாகஉள்ள ஆட்சியாளர்கள், 'தாமுண்டு தம் வாழ்வு உண்டு' என்று உழன்று கொண்டிருக்கும் மக்களைத் தூங்கும்புலி என்று அறியாது

மிதித்தால், சீறி எழும் மக்கள், புரட்சி நடாத்தி, பொல்லாங்கைப் பொசுக்குகின்றனர். இது புரியக்கூடியதே! தூங்கும் புலி, என்பதைக் காணமுடியாத குருடனல்ல; விழி பழுதாகாதான், பல் முறை மிதித்தும், புலி எழவுமில்லை, எழுந்தாலும் சீறிப் பாய்வதில்லை, பதுங்கிக் கொள்கிறது, அல்லது அவன் பாதத்தில், குச்சுநாய்க் குட்டிபோலக் கிடக்கிறது; என்றால், அவனும், அவன் 'பாடம்' பெற்ற அவன் போன்றாரும், புலி நம்மை ஏதும் செய்யாது என்றுதானே எண்ணிக்கொள்வர்.

ஆனால், மக்கள் தூங்கும் புலியாக மட்டுமல்ல— கல்லுருவில் உள்ள புலிபோலவே, சில சமயம் இருந்திருக்கின்றனர். அதே மக்கள் வேறோர் சமயம், தூங்கும் புலி எழுந்ததுபோல அல்ல, கல்லுருவில் இருந்த புலி, உயிர் பெற்றெழுந்து சீறிப் போரிடுவதுபோலச் செய்திருக்கின்றனர்.

முதலாம் சார்லஸ் மன்னன், மக்களை, கல்லுருவில் இருக்கும் புலி என்று எண்ணியே, காரியமாற்றினான்— சிரம் இழந்தான்.

பொதுவாகவே, மக்களின் இயல்பு அறிதல் எளிதல்ல; அதிலும் பிரிட்டிஷ் மக்களின் இயல்போ, மேலும் அதிகமான விசித்திரம் நிரம்பியது.

அவர்கள், 'பொதிசுமக்கும் மாடு'போலவும் இருந்திருக்கிறார்கள்! பாயும் புலியாகவும் மாறி இருக்கிறார்கள்! அரசனின் அடிபணிந்து வந்திருக்கிறார்கள்! அரசனின் தலையை வெட்டி வீழ்த்தியுமிருக்கிறார்கள்! அரசனுக்காக! என்று வீராவேச முழக்கமிட்டுக்கொண்டு களம் புகுந்துமிருக்கிறார்கள், அரசனை விரட்டி அடித்துமிருக்கிறார்கள். கேட்ட வரிகளை எல்லாம் கொட்டிக் கொடுத்துமிருக்கிறார்கள்; வரிபோடும் அதிகாரம் உனக்கு ஏது என்றும் கேட்டிருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும், பிரான்சுக்காரருக்கு உள்ளது போன்ற கொதிப்புள்ளம் பிரிட்டிஷாருக்குக் கிடையாது; எளிதிலே, சூடு ஏறுவதில்லை!

முதலாம் சார்லஸ் மன்னன், ஏமாந்ததில் ஆச்சரியம் அதிகமில்லை; அவன் பிரிட்டிஷ் மக்களின் இயல்பை உணராததுதான் ஆச்சரியமானது.

ட்யூடர் பரம்பரை மன்னர்கள் காலத்துக்குப் பிறகு பட்டமேறிய முதலாம் ஜேம்சின் குமாரன், சார்லஸ். தன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மக்கள், ட்யூடர் காலத்திலே, எப்படி நடந்துகொண்டார்களோ, அதனை அவர்கள் இயல்பு என்று எண்ணிக்கொண்டான்; அதனால் தன் ஆட்சி முறைக் கு எதிர்ப்புக் கிளம்பக் காரணமே இல்லை என்று நம்பினான்—தூக்குமரம் நாட்டப்பட்டபோது கூட, அந்த நம்பிக்கை அவன் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

மக்கள் கொதிப்பரோ என்பது பற்றிக் கவலையற்று ஆண்டான், எட்டாம் என்ரி—எதிர்த்தவர்களை, பிரபுக்களாயினும் கொன்றான்—மக்கள் சீறி எழவில்லை—வெறுப் புணர்ச்சி வெளிப்படவில்லை.

பதினாறு ஆண்டுகள் காதரைன் அரசியுடன் வாழ்ந்து வந்தான்—ஓர் நாள் அவள் பணிப்பெண் ஒருவள் மீது மையல்கொண்டான்-ஆன்பொலின் மனைவி ஆக்கப்பட்டாள். காதரைன் விலக்கி வைக்கப்பட்டாள். ஐரோப்பிய அரச குடும்பங்கள் கொதித்தன, என்ரி, அஞ்சவில்லை! போப் பாண்டவர் சாபமிடக் கிளம்பினார், அவருடைய'கத்தோலிக்க' மார்க்கமே என் அரசில் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தான்-இந்தத் திடுக்கிடும் நிகழ்ச்சிகளைக் கண்ட பிரிட்டிஷ் மக்கள், உரத்த குரலில்கூடக் கண்டிக்கவில்லை.

காதரைன், ஆன்பொலின், ஜேன்சைமூர், ஆன், காதரைன் ஆவர்டு, காதரைன்பார்!

ஆறு மனைவிகள்—ஒருவர்பின் ஒருவராக!! யார் கேட்டார்கள்? யாருக்கும் தோன்றவில்லை! காலில் வீழ்ந்தழுதாள் முதல் மனைவி காதரைன், கருணை காட்டவில்லை! கண்டனம் பிறந்ததா? இல்லை! ஆசைக்கினியவன் என்று கூறி ஆன் பொலீனை திருமணம் செய்துகொண்டான். பிறகு அவள் வழுக்கி விழுந்தாள் என்று கூறிச் சிரம் கொய்தான்—யார் சீறி எழுந்தனர்? மக்கள் வாளா இருந்தனர்! மடாலயங்களைக் கலைத்தான், மக்கள் எழவில்லை! மனம்போன போக்கில் நடந்தான், மக்கள் அனுமதித்தனர்!!

ட்யூடர் பரம்பரை, மக்கள் உரிமையை மதித்து நடந்தார்கள் என்றோ, அடக்கு முறையை ஏவாமலிருந்தார்களென்றோ, கூறுவதற்கில்லை.

எனினும், பிரிட்டிஷ் மக்கள், விவசாயத்தை வளமாக்குவதிலும், வியாபாரத்தைச் செழிப்புறச் செய்வதிலும், வீரத்தைப் பெருக்கிக்கொள்வதிலும், அறிவுத் துறையிலே நாட்டம் செலுத்துவதிலும், ஈடுபட்டிருந்தனர்—உரிமை பறிக்கப்படுவது பற்றியோ, மன்னர்கள் எதேச்சாதிகாரம் குறித்தோ கவலை எடுத்துக்கொள்ளவில்லை.

சார்லஸ் மன்னன், பிரிட்டிஷ் மக்கள், என்ன காரணத்தினால், ட்யூடர் போக்கைக் கண்டிக்காமலிருந்தனர் என்று எண்ணிப் பார்க்கவில்லை. பிரிட்டிஷ் மக்களின் இயல்பு அது, ஆள்வோரின் அடிதொழுவதுதான் அவர்கள் சுபாவம், என்று முடிவுசெய்தான். தவறான முடிவு! ஆபத்தான விளைவு!!

ட்யூடர் காலத்தில், பிரிட்டிஷ் மக்கள், ஆற்றல் மிக்கவர்கள் ஆளுகிறார்கள், முறையும்நெறியும் சில சமயம் கோணலாகி இருந்தாலும், நாட்டின் வளமும் கீர்த்தியும் பெருக்குவதிலே திறன் படைத்திருக்கிறார்கள்; நாம் இப்போது உரிமைகளைப்பற்றி அதிகமாகக் கவலைகொண்டிருக்கத் தேவையில்லை; கடல்கடந்த நாடுகளிலே செல்வம் கிடைக்கிறது; தொல்வளம் பெருகினால் வாழ்விலே இன்ப சாதனங்கள் பெறக்கிடக்கிறது, இவைகளைக் கவனிப்போம், என்ற போக்கில் இருந்தனர். எப்போதும் இதே போக்குத்தான் இருக்கும், என்று எண்ணியது, சார்லஸின் தவறு மட்டுமல்ல, அவன் தோன்றிய ஸ்டூவர்ட்டு பரம்பரை செய்த தவறுமாகும்.

சார்லஸ் மன்னன், நாட்டைத் தன் களிநடனக் காடாக்கிக்கொள்ள எண்ணினவனல்ல! தன் போக போக்கியத்துக்காக மக்களின் சொத்துகளைச் சூறையாடினவனல்ல! பிரன்ச்சு நாட்டு மன்னர்கள் அமைத்துக் கொண்டிருந்தது போன்ற கோலாகலமான கொலு மண்டபம் நிறுவிக்கொண்டு, அங்கு காமக் குரங்குகளை உலவவிட்டுக் கொண்டிருந்த உலுத்தன் அல்ல! கற்றறியா மூடனுமல்ல; வெறிபிடித்தலைந்த வீணனுமல்ல!

ஏழைகளின் இரத்தத்தை உறுஞ்சிக் கொழுக்கும் பிரபுக்களைப் பராக்குக் காரர்களாகக் கொண்டு, அழகிகளைக் கண்டால் மனதை அலையவிட்டு ஆபாசமான கேளிக்கைகளில் ஆழ்ந்து கிடந்த மன்னர்கள் உண்டு.

நகருக்குத் தீ மூட்டிவிட்டு, அந்த நர்த்தனத்துக்கு ஏற்ற நாதம் எழுப்பிய நீரோ உண்டு.

சார்லஸ் மன்னன், இத்தகைய கெடுமதி கொண்டவனல்ல; கொடுமை செய்வதிலே களிப்புக் கொண்டவனுமல்ல. நேசத்துக்குரியவன்; நண்பர்களுக்கு இனியன்; நாட்டு மக்களை வேட்டைக்கு உரிய மிருகமென்று எண்ணிடும் பேயனல்ல!

தனிப்பட்ட மனிதன் என்ற முறையில், சார்லஸ் மன்னனிடம் வெறுக்கத்தக்க குணம் ஏதும் தலைவிரித்தாடவில்லை.

கடைசி வரையில் அவன் கொண்டிருந்த ஒரே பெருந் தவறான குணம், மக்களை உணராதது; அதன் பலனாக மன்னன் என்ற நிலைமையின் பொருளை அறியாமற் போனதுதான்.

கண்கள், கமலம்! குரல், குயில்! ஆடை, பட்டு! அலங்காரம், அமோகம்! பன்னீரில்தான் குளித்தெழுவாள்! எனினும் அந்த அணங்குக்குத் தொழு நோய்! என்பதுபோல, சார்லஸ் மன்னன் இருந்தான்.

ஆபத்தான ஒரு தத்துவத்திலே அவன் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தான்; அதை மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று அறியாமல், பன்னிப் பன்னிக் கூறிவந்தான்; மக்கள் அந்தத் தத்துவத்தை எதிர்க்க எதிர்க்க, முரட்டுப்பிடிவாதமாக அதனைக் கட்டிக் காத்துக்கொண்டிருந்தான், முடிகூட அல்ல, முடிதரித்த தலையே போயிற்று!

மன்னன்—ஆண்டவனுடைய அருள் பெற்றவன்.

தேவப் பிரசாதமாக மன்னனுக்கு அரசு கிடைக்கிறது.

எனவே, மக்களுக்கு ஏதை எப்படிச் செய்தல்வேண்டும் என்று அறியும் அறிவும், செய்யும் ஆற்றலும், உரிமையும், மன்னனுக்கு மகேசனால் தரப்படுகிறது.

மன்னன், தன் நடவடிக்கைகளுக்கான கணக்கை ஒப்படைக்க வேண்டியது, ஆண்டவனிடம்தான்.

மன்னனுடைய அதிகாரத்தை மட்டுப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ, நீக்கவோ, ஆண்டவனுக்குத்தான் உரிமை—ஆற்றல்.

மக்களை ஆட்சி செய்யும் மகத்தான உரிமையை மகேசன் அளித்திருப்பதால், மக்கள் மன்னன் செய்வதை, மகேசன் ஆணைப்படி நடப்பதாக எண்ணி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டவனின் அருளாலே அரச பதவி கிடைத்திருப்பதால், அரசனுடைய செயலைக் குறை கூறுவது, ஆண்டவனுடைய ஏற்பாட்டைக் குறை கூறுவதாகும்.

மன்னன், மக்களின் நலனுக்குக் கேடு சூழத்தக்க காரியம் செய்ய மாட்டான், ஏனெனில், அப்படிப்பட்ட நடத்தைக்காரனை ஆண்டவன் அரசனாக்கி இருக்க மாட்டார்.

மக்கள், மன்னனுடைய எந்தச் செயலையாவது, கேடு தருவது எனக் கருதினாலும், எதிர்ப்பது, கடவுளை எதிர்ப்பதாகும்.

மக்களுக்குப் பரிகாரம் தேவை என்றால், ஆண்டவனிடம் முறையிட்டுக் கொள்ளவேண்டும்.

மக்களுடைய கோரிக்கை நியாயமானதாக இருந்தால் அரசனை அதனைச் செய்யும்படி ஆண்டவனே அருள் பாலிப்பார், அக்ரமம் செய்யும் அரசனை ஆண்டவன் தண்டிப்பார்!

அரண்மனையில் இருக்கும் அரசன், ஆலயத்தில் இருக்கும் ஆண்டவனுடைய பிரதிநிதி!

இந்தத் தத்துவம்தான், சார்லஸ் மன்னனின் தலையைப் பறித்தது!

இந்தத் தத்துவத்தைத் தந்து சென்றவர், சார்லசின் தந்தை ஜேம்ஸ்!! தந்தை மகர்க்காற்றும் உதவி இந்த வகையில் அமைந்தது.

ஜேம்ஸ் மன்னன், இந்த 'தேவன் அருள்' தத்துவத்தைப் பெரிதும் வலியுறுத்திவந்தார்.

"அக்ரமக்காரன்!"—என்று ஒரு மன்னன் பெயர் எடுத்தால், மக்கள், ஒன்று அவனைக் கொன்றுபோடக் கிளம்புவர்; அல்லது இவன் ஒழியட்டும், நல்ல காலம் விடியட்டும் என்று பொறுத்துக்கொண்டு கிடப்பர்.

மன்னன், சித்த சுவாதீனமற்றவன் என்றால், "என்ன செய்வது! நமக்கு இப்போது வாய்த்த மன்னன் இப்படி இருக்கிறான்; இவன் மகன் பட்டத்துக்கு வந்தால் இந்தக் குறை நீங்கும்" என்று பேசி, மன அமைதி அடைவர்.

குடிலர்கள் கெடுக்கிறார்கள், அதனால்தான் மன்னன் கொடுமை புரிகிறான், என்றால், கெடுமதியாளரைத் தொலைத்திட வழி என்ன என்று எண்ணுவர்; தொலைத்திட முயற்சிப்பர்.

போக போக்கியத்தில் மூழ்கிக் கிடந்தால், வெறுப்பு மட்டுமே தோன்றும் அரசனிடம்.

மதியற்றவனாக இருந்தால், ஏளனம் செய்வர் மன்னனை.

கொடுமையாளனாக இருந்தால், மன்னனிடம் பயப்படுவர்.

சார்லஸ் மன்னன், கெடுமதிகொண்டவனல்ல, கொடுமைக்காரனல்ல சுபாவத்தில், எனினும் அவன் கொண்டிருந்த தத்துவத்தின் காரணமாக, மக்கள் வெறுப்பு, பயம், ஏளனம், காட்டினர்; சார்லசிடம் மட்டுமல்ல, அரச பதவி மீதே!

அரசன் எப்படியும் இருப்பான், ஏதும் செய்வான், ஆண்டவனிடம் முறையிட்டுக்கொள்வதன்றி, மக்களுக்கு வேறு வழிகிடையாது, என்றல்லவா சார்லஸ் கூறுகிறான்! இதை ஏற்றுக்கொண்டால் இப்போது மட்டுமல்ல, இனி வருங்காலமெல்லாம், மக்கள் அவதிக்கு ஆளாகிக்கிடக்க வேண்டும், வாயில்லாப் பூச்சிகளாக இருக்கவேண்டும்! மக்களின் உரிமை, என்ன ஆவது? என்று எண்ணினர்—அந்த எண்ணம், மக்களைப் புலியாக்கிவிட்டது.

உரிமை! அந்தச் சொல்பற்றி, ட்யூடர் காலத்தில் அதிகமான கவலை கொள்ளாதிருந்த மக்கள், ஸ்டுவர்ட்டு மன்னர்கள் பேசிவந்த 'ஆண்டவன் அருள்' தத்துவத்தால், மன்னன் உரிமை இது என்றால், மக்களின் உரிமை என்ன, என்று எண்ணலாயினர். எண்ணிய போது, மக்களுக்கு, முன்னாள் நினைவுகள், முந்திய வரலாற்றுச் சம்பவங்கள், தம் மூதாதையர், போரிட்டுப் பெற்ற உரிமைகள், அந்த உரிமைகளின் காரணமாக, மன்னன் மக்களின் மூலமே அதிகாரம் பெறுகிறான், ஆகையால், மக்களின் ஆதரவு பெற்றே அரசாள வேண்டும் என்ற உண்மை, இவ்வளவும் தோன்றலாயின! தோன்றியதும், நமது உரிமையையல்லவா, சார்லஸ் பறிக்கிறான்—அதைக் கடவுள் கட்டளை என்று வேறு கதைக்கிறானே, இந்த அக்ரமத்தை அழித்தாக வேண்டுமே, என்று துடிக்கலாயினர்! இந்தத் துடிப்பைக் காண, உரிமை வேட்கையும் அதைப்பெறப் போரிடும் ஆற்றலும் கொண்ட வீரர் சிலர் முன்வந்தனர்! முடிதரித்த தலை, மண்ணில் வீழ்ந்தது.

"ஏசுநாதருக்கு ஒரு ஜான் இருந்தார் — எனக்கு ஒரு ஜார்ஜ் இருக்கிறார்—இதில் என்ன தவறு!" என்று ஆணவமாகப் பேசினவன் சார்லசின் தந்தை.

ஊராரின் வெறுப்புக்கு ஆளான ஜார்ஜ்வில்லியர்ஸ் என்ற வாலிபனை, ஜேம்ஸ் மன்னன் அதிகாரமளித்து ஆதரித்தான்—ஜார்ஜ்வில்லியர்ஸ், பக்கிங்காம் கோமகன் எனும் செல்வ நிலைக்கு உயருமளவுக்கு. இதை மக்கள், வெறுத்தபோதுதான், ஜேம்ஸ், நானே நாடாளும் அரசன், எனக்கு யாரிடம் நம்பிக்கையும் பற்றுதலும் இருக்கிறதோ, அவர்களை அதிகாரத்தில் அமர்த்துவேன், நீங்கள் யார் அதைக் குறைகூற! என்று கேட்டான்!

இதை ஒரு தத்துவமாக்கி, ஏசுநாதர், யார் தமக்குச் சீடராகும் தகுதி உடையார் என்பதை அறிந்து ஜான் என்பவரைச் சீடனாகக் கொண்டதுபோல, நான் ஜியார்ஜ் என்பவரைக் கொண்டிருக்கிறேன்—எப்படி ஏசுநாதரை யாருமே அதற்காகக் குறை கூறலாகாதோ, அதேபோல, என்னையும் குறை கூறக்கூடாது, இரண்டும் பாபம், என்று எடுத்துரைத்தான்.

ஏசு, ஜேம்ஸ்! தேவன், மன்னன்!

பரலோகத்துக்கு ஏசு! இகத்துக்கு ஜேம்ஸ்!!

இந்தத்தத்துவத்தை மக்கள் உட்கொள்ளமறுத்தனர்—ஜேம்ஸ் திணித்தே தீருவது என்று வேலை செய்தான்.

மன்னரின் அதிகாரம் மக்களால் கட்டுப்படுத்த முடியாதது—ஆண்டவன் அரசனைப் படைப்பிக்கிறார்.

அவரே அரசனைக் கட்டுப்படுத்த முடியும், என்ற விபரீத தத்துவத்தை விளக்க ஜேம்ஸ் மூன்று ஏடுகள் கூடத் தீட்டினான்.

இந்த ஏடுகளை விவாதத்துக்கு வைக்கவில்லை—விஷயமறியாத மக்கள் உண்மையை உணர்ந்து கொள்ளட்டும் என்பதற்காகத் தீட்டினான்!

நிரம்ப அறிவு முதிர்ச்சி உள்ளவன் என்ற எண்ணம் இந்த மன்னனுக்கு! மக்களுக்கு அறிவு ஊட்டும் ஆசானாகத் தன்னை ஆக்கிக்கொண்டான். தன் 'செல்லமான' தத்துவத்தை மகனுக்கும் ஊட்டினான்.

மக்களுக்கும் சரி, மாதாகோயில் பூஜாரிக்கும் சரி, யாருக்கும் அடங்காதே! நீ அரசன்! ஆண்டவனால் அரசனாக்கப்பட்டவன்! உனக்குள்ள அதிகாரம் அளவற்றது, எவராலும் கட்டுப்படுத்த முடியாதது—என்று கூறிக்கூறி, சார்லசின் இளம் உள்ளத்தில், இந்த நஞ்சை நன்றாகப் புகுத்தி இரத்தத்தையே கெடுக்குமாறு செய்துவிட்டான். அவன் கண்டானா, அந்த நஞ்சு, மக்களை அல்ல, மன்னனையே கொல்லும் என்பதை. அவன் காலத்திலே, பிரிட்டனில் பரவிய, 'புகையிலை' வழக்கத்தால், மக்களுடைய உடல்வளம் கெடும், என்று புத்திகூற ஒரு ஏடு தீட்டிய இந்த மன்னன், மகனின் உயிரை வாங்கக் கூடிய ஒரு தத்துவத்தை ஊட்டிவிட்டுச் சென்றான்.

ஒய்யார நடை உடை பாவனைகொண்ட ஜார்ஜ்வில்லியர்சையும், ஜேம்ஸ் தன் மகனுக்குத் தந்து சென்றான்.

தத்துவம் ஒரு நஞ்சாக அமைந்தது—ஜார்ஜ்வில்லியர்ஸ், நச்சரவமாகவே அமைந்தான். இரண்டையும் சார்லஸ் மிக விரும்பிப் பாராட்டினான்-இரண்டும் மக்களை ஆத்திரமடையச் செய்தன.

ஆண்டுக்கு ஆயிரம் பவுன் சம்பளத்தில், மன்னனின் படுக்கை அறைக் காரியத்தைக் கவனிக்கும் அதிகாரியாக 1614ம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஜார்ஜ்வில்லியர்ஸ், மிக வேகமாக ஜேம்ஸ் மன்னனுடைய ஆதரவைப் பெற்று, பல பதவிகளையும் பட்டங்களையும் பெற்று, 1617ம் ஆண்டிலே எண்பதாயிரம் பவுன் பெறுமானமுள்ள நிலத்துக்குப் பிரபுவானான்! அரச தயவுகிடைத்த மூன்றாமாண்டு அவனுக்கு ஆண்டொன்றுக்குப் பதினைந்தாயிரம் வருமானம் கிடைக்கலாயிற்று. இத்துடன் நிற்கவில்லை! பரம்பரைப் பிரபுக்கள் பாழடைந்த மாளிகையிலே அமர்ந்த வண்ணம் பழங்காலப் பெருமைகளை எண்ணிக் கொட்டாவிவிட்டுக் கொண்டிருந்தனர். ஜார்ஜ்வில்லியர்ஸ் சிட்டெனக் கிளம்பினான், வல்லூறுபோல, பதவிகளைக் கொத்தித்தின்று கொழுத்திடலானான். ஜேம்ஸ் மன்னன் ஜார்ஜ்வில்லியர்சிடம் வைத்திருந்த நம்பிக்கையும் பரிவும் இளம் சார்லசுக்குத் தெரிந்தது—வில்லியர்ஸ், தன் செல்வாக்கை வளரச் செய்ததுடன், அதனை நீடிக்கச் செய்வதற்காக, இளவரசனுடைய இதயத்தையும் வென்றான்—சார்லஸ், ஜேம்ஸ் காட்டியதைவிட அதிகமான ஆதரவு காட்டி, வில்லியர்சைத் தன் இணைபிரியா நண்பனாக்கிக் கொண்டான்.

பக்கிங்காம் கோமகனாகிவிட்டான், ஜார்ஜ் வில்லியர்ஸ்—பட்டத்தரசன் அவன் வார்த்தையைத் தட்டி நடப்பதில்லை. எனவே அரசனைச் சுற்றி இருந்த பிரபுக்களும் அதிகாரிகளும், பங்கிங்காமுடைய தயவுக்காகக் காத்துக் கிடந்தனர். தன் செல்வாக்கின் அளவை நன்கு அறிந்த பங்கிங்காம், பெரும் பொருள் திரட்டுவதிலும் பிரபுக்களை அடிமைப்படுத்துவதிலும் திருப்தி அடையவில்லை—மாளிகை மாடப்புருக்களுக்குக் கண்ணி வைப்பான், மகிழ்வான் — அரண்மனை மயில்களையே பிடித்துவைத்துக் கொஞ்சிடும் ஆணழகனானான்! அவன் சொல், மன்னனுடைய சொல்லுக்குச் சமம்! அவன் பரிவாரம், மன்னருக்கு உள்ளது போன்றது! ஆணவம், அரசனும் கொள்ள அஞ்சும் அளவுக்கு இருந்தது. பக்கிங்காமின் அட்டகாசம் இங்கிலாந்தில் மட்டுமல்ல, பிரான்சிலும், ஸ்பெயினிலும்கூடப் பேசப்பட்டது — கண்டிக்கப்பட்டது. எனினும், மன்னன், அவனைத் தன் தோழனாகக் கொண்டான்—மக்கள் வெறுத்தனர், எனினும் மன்னன் சட்டை செய்ய மறுத்தான்.

எந்தப் பதவி தேவையானாலும், மன்னனுடைய ஆதரவு கிட்டினால்மட்டும் போதாது — பக்கிங்காம் தலை அசைக்கவேண்டும்—அவன் சிரமோ, காணிக்கைபெறாமல் அசையாது. நீதிமன்றத் தீர்ப்புகளை மாற்றுவான், வியாபாரக் கோட்டங்களை ஆக்குவான், அழிப்பான், மாளிகையிலிருப்போரைச் சிறைக்குள் தள்ளுவான், சிறையிலிருப்போரைச் சீமானாக்குவான், எதுவும் செய்வான், எவரும் அவன் பாதையில் குறுக்கிடக்கூடாது! தன் உறவினர்களுக்கு உயர் பதவி! பெரிய பிரபுக்களின் குடும்பத்தாருடன், மணவினை மூலமாக உறவு! பக்கிங்காம், முடிதரியா மன்னன் போலாகிவிட்டான். தன் விருப்பத்துக்கு மாறாக நடப்பவர் யாரானாலும், அவர்கள்மீது பகை கக்குவான்.

ஸ்பெயின் அரச குடும்பத்தார் அவனுடைய அட்டகாசத்தைக் கேலி செய்தனர்—பக்கிங்காம், ஸ்பெயின்மீது போர் தொடுக்கும்படி பிரிட்டனை எழுப்பமுடிந்தது.

பிரன்சு நாட்டு இராணி ஆன், இவன் மையலில் வீழக்கண்டு, பிரன்ச்சு அரசர் தடுத்தார்—பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் போர் மூண்டது! பிரன்ச்சு அரசகுடும்பத்தாருடன் தனக்கு ஏற்பட்ட பகையின் காரணமாக, பக்கிங்காம், சார்லஸ் திருமணம் செய்துகொண்டிருந்த பிரன்ச்சு அரசகுமாரி ஹெனிரிடாவுக்கும் மன்னனுக்கும் மனக்கசப்பு மூட்டிவிட்டான்—பக்கிங்காம் இருந்தவரையில், அரசி அழுதுகிடந்தாள். அவ்வளவு பலமான பிடி இருந்தது பக்கிங்காமுக்கு.

மூன்று பேரரசுகளாகத் திகழ்ந்த பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், ஆகிய இடங்களில், மன்னர்களை ஆட்டிப் படைத்தவர்கள், முறையே பக்கிங்காம், ரிஷ்லு, ஒலிவாரிஸ், என்பவர்கள். இதிலே ரிஷ்லு ஆற்றல் மிக்கவனாக விளங்கினான்—அந்த அளவுக்கு ஆற்றலற்று விளங்கினவன், பக்கிங்காம்.

அவனுடைய பெருமைக்கு ஏற்ற அளவுக்குப் படை திரட்டப்படும்—அவனுடைய முரட்டுக் குணத்தின் விளைவாகப் போர் மூளும்—வெற்றி மட்டும் கிட்டாது!

அவன் கேட்டால், கப்பற்படை அமைக்கப்படும்—கலங்களில் தங்கநிறப் படுதாக்கள் அழகளிக்கும்—வெற்றி மட்டும் கிடையாது!

போரிலும் சரி, நிர்வாக முறையிலும் சரி, பக்கிங்காம், திறமையைக் காட்டியதில்லை. மக்கள் ஆச்சரியப்படத்தக்க வெற்றிகள் ஏதும் பெற்றானில்லை, அவன் அடைந்த ஒரே வெற்றி, மன்னனிடம் கொண்டிருந்த மகத்தான செல்வாக்கு! மக்கள் எங்ஙனம் சகித்துக்கொள்வர்.

எலிசபெத் இராணியாரின் காலத்தில், பிரிட்டிஷ் கொடி, எங்கும் கெம்பீரமாகப் பறந்தது. 1588-ல், இங்கிலாந்தை அழித்தொழிக்கும் நோக்குடன் கிளம்பிய ஸ்பெயின் நாட்டுப் பெருங் கப்பற்படையைச் சின்னாபின்னமாக்கி, பிரிட்டன் வெற்றிக் கொடி நாட்டிற்று! ஐரோப்பிய நாடுகள் அனைத்தும், பிரிட்டனுடைய வல்லமையை வியந்தன. அப்படிப்பட்ட பிரிட்டன், பங்கிங்காம் காலத்தில், லாரோகேல் கோட்டையைக் காப்பாற்ற, பிரான்சுடன் தொடுத்த கடற்போரிலே, கேவலமாகத் தோற்றது! கடலிலே, பிரிட்டிஷாரின் பிணங்கள் மிதந்தன! கலங்கள் சுக்கு நூறாகிக் கடலடிசென்றன! போர்த் தளபதி பக்கிங்காம்!!

(தொடரும்)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 13] 5—6—55 [இதழ் 48

'பொற்கோயில்' பூமியில்!

—[]—

"ஆகவே, நிரபராதி என்கிற முடிவுக்கு வந்துவிட்டோம்.

அவர்மீது இப்படிக் குற்றங்களைச் சுமத்தியோர்மீது, மான நஷ்ட வழக்குப் போடவும், அவருக்கு அனுமதி அளிக்கிறோம்."

*

இவ்வண்ணம், டில்லிக் காங்கிரஸ் மேலிடத்திலிருந்து, 'தீர்ப்பு' வெளியாகிவிட்டது.

தீர்ப்பைக் கண்ட பஞ்சாப் நல்லறிவாளர்கள் பதை பதைத்தவண்ணம் கூடிப் பேசி, குமுறலைத் தெரிவிக்கிறார்கள், ஜனநாயக உலகுக்கு.

அமிர்தசரசிலுள்ள பொற்கோயிலுக்கு எதிரிலிருந்து புறப்பட்டவண்ணம், இதுவரை சுமார் 1300-க்கு மேற்பட்ட சிக்கிய வீரர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள், சிறைக்கு. பஞ்சாபி சுபா! பஞ்சாப் தனியாட்சி பெறவேண்டும்—எனும் முழக்கங்களைச் சொல்லக்கூடாதெனச் சர்க்கார் விதித்த அடக்குமுறையைத் தூள் தூளாக்கி, தாராசிங் கட்சியினர், அறப்போராட்டம் நடத்திக்கொண்டுள்ளனர், பஞ்சாபில். சிறைச்சாலையில் பூட்டுவது என்ற கட்டம் மாறி, இப்போது தடியடி! கண்ணீர்ப் புகை! என்கிற அகிம்சா கட்டத்துக்கு' சென்றுகொண்டிருக்கின்றனர், அசோக சக்கரத்தை இலச்சினையாகக் கொண்ட சர்க்கார். துப்பாக்கி முழங்கிற்றென்று கேள்விப்படினும் ஆச்சரியப்பட முடியாது. ஏனெனில், அந்தளவுக்கு, சீக்கியர்தம் உரிமைக் கோரிக்கையை அழிப்பதென்று கருவிக்கொண்டிருக்கிறது, காங்கிரஸ்! நேருவோ, தாராசிங் கட்சியாளர்மீது வீசிய வார்த்தை வெடிகுண்டுகள், பலப்பல! முட்டாள்தனம் - பைத்தியக்காரத்தனம்—வெறியர்கள்—நாட்டின் அமைதியைக் குலைப்பவர்கள் என்றெல்லாம் ஏசினார்.

இப்போது, பஞ்சாபை ஆளும் காங்கிரஸ் சர்க்கார், தடியடி! கண்ணீர்ப் புகை! வாய்ப்பூட்டுச் சட்டம்! சிறைச்சாலை! இவை மூலம் நாட்டில் அமைதியை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. சீரிய இத்திருச்சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அரசமைச்சரில் ஒருவருக்குத்தான் மான நஷ்ட வழக்குத் தொடர, காங்கிரஸ் மேலிடம் அனுமதியளித்துள்ளதாம்.

ஜகத் நாராயண், என்பார், பஞ்சாபை ஆளும் அமைச்சர்களில் ஒருவர். அவர்மீது, லஞ்சம் வாங்கினார்! ஊழல்களில் ஈடுபட்டார்! வேண்டியோருக்கு உதவினார்!—என்று, குற்றங்கள் சாட்டப்பட்டன, எதிர்க் கட்சியினரால். மக்களின் வரிப்பணம் விரயம் ஆவது பொறுக்காமல், இவ்விதம் குற்றம் சுமத்தியிருக்கின்றனர், வெளியிலும், சட்டசபையிலும். குற்றச்சாட்டுகளின் குரல், வலுக்கவே, பஞ்சாபை ஆளும் முதலமைச்சர் பீமசேன சச்சார் தந்திரமாக நடந்துகொண்டிருக்கிறார்! தானே, குற்றங்களை விசாரிப்பதாக வெளியிட்டு, அதுபற்றி விசாரணைகளைச் செய்து, டில்லித் தலைமைக்கு அனுப்பியிருக்கிறார், விபரங்களை. டில்லித் தேபர், அந்த அறிக்கையைப் பரிசிலனை செய்துவிட்டு, "ஆகவே, குற்றம் சுமத்தியோர் மீது மானநஷ்ட வழக்குப்போடவும் அனுமதிக்கிறோம்" என்று தீர்ப்பளித்துவிட்டார். குற்றஞ்சாட்டப்பட்டவன், கூண்டில்! வக்கீலாகிறான் திருடனின் சகா! நீதிபதி ஸ்தானத்திலிருந்து தீர்ப்பு அளிக்கிறான், அத்திருடர்களின் தலைவன்!—என்பதுபோல, காங்கிரஸ் அமைச்சர் மீது வீசப்பட்ட குற்றச்சாட்டுகளை, அவருக்குத் தலைவரான முதலமைச்சர் விசாரித்து, அந்த விசாரணையை அவர்களுக்குமேலிடமான டில்லிப்பீடம் பார்வையிட்டு, கடைசியில், 'போலீஸ்வேலை' செய்தோர் மீது வழக்குத் தொடரும்படி ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கையால், காங்கிரசின் தூய்மையைப்பற்றி வெளியுலகம், அறிந்து கொள்ளுமாம்—கூறுகின்றனர்,

ஆனால், பஞ்சாபிலுள்ள எதிர்க் கட்சியினர், காங்கிரசின் இப்போக்கைக் கண்டதும், பரிதாபப்பட்டிருக்கிறார்கள், திருடன் நீதிபதியாவதா—திருடர்களா, நமது தலைவிதியை நிர்ணயிப்பது, என்று. யாருக்குத்தான் வராது, சோகம்! அதிலும், பஞ்சாப், பல தினங்களாக அறப்போர் நடாத்திக் கொண்டிருக்கும் இடமாயிற்றே!! அதனால், டில்லி ஆதிக்கத்தின் போக்குக் குறித்து, அவர்கள் மத்தியில் ஆவேசமும் எரிச்சலும் ஏற்பட்டிருக்கிறது.

"ஏனய்யா! இதுதான், உங்கள் ஜனநாயக இலட்சணமோ? உங்களைத் தீர்ப்புவழங்கும்படி யார்கேட்டோம்! நீங்கள் யார், எங்களுக்கு நீதிபதிகளாயிருக்க!! காங்கிரஸ் மந்திரி, இன்னின்ன ஊழல்களைச் செய்தார்; பாரபட்சமற்ற விசாரணையை ஏற்பாடு செய்தால் அந்த ஊழல்களைப் பற்றிச் சொல்லுகிறோம் என்று தெரிவித்தோம். அப்படிச் செய்வதைவிட்டு, நீங்களே கூடிக் கலந்து பேசி, இப்படி முடிவுசெய்துவிட்டால், கறையைக் கழுவிக் கொண்டதாக ஆகிவிடுமோ?" என்று எதிர்க் கட்சியினர், கேட்கிறார்களாம், அங்கே.

காங்கிரஸ் மேலிடத்தின், இந்த உத்தரவு, எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கத் தூண்டும் செயலென்றும் கருதுகின்றனராம்.

அமைச்சர் என்றாலே, ஆளம்பு, பணவசதி, அதிகார மந்திரம் அனைத்தும் பெற்றவர் என்று பொருள்! அதிலும் ஜகத்நாராயணனுக்கு முதலமைச்சரின் ஆதரவும், மேலிடத்தின் 'கிருபாகடாட்சமும்' பூர்ணமாக இருக்கிறது. எதிர்க் கட்சிக்காரர்கள், நிலை, எதுவோ! வக்கீல் வைத்து வாதாடும் அளவுக்கு அருகதையற்ற, அன்னகாவடிகளாயிருக்கலாம்—நீதிமன்றத்தின் படிக்கட்டுகளுக்கும் பணநாதனுக்கும் தொடர்பிருக்கும் இந்தக் காலத்தில், இல்லாதவர்களால், எப்படிப் பெறமுடியும் நியாயம்! ஒருவேளை, குற்றச்சாட்டுகளை எடுத்து வாதாடும் வக்கீலைப் பெறவும் முடியாததால், அமைச்சருக்கு மான நஷ்டம் வழங்க நேர்ந்தால்கூட நேரலாம்! ஆச்சரியத்துக் குரியதல்ல, அப்படிப்பட்ட சம்பவம், நிகழ்வது.

அதனால், பஞ்சாபிலுள்ள நல்லறிவாளர்களைப்போல நாமும் கேட்கிறோம் — ஜனநாயக ஆட்சியில்,

இப்படிக் குறைகளை கூறப்படக் கூடாதா? அப்படிக் கூறினுல், அதற்கு மானநஷ்ட வழக்குப்போடு என்பதுதான்,ஒரு பெரிய கட்சியின் நடைமுறைத் திட்டமா?

இதனுல், பொறுப்புள்ளவர்கள் மீது வீண்பழிகளை வீசவேண்டும்—அப்படி வீசப்படும் முறை வளர வேண்டும்—அந்த முறையை வளர்ப்பது எதிர்க்கட்சியென்பதால், இஷ்டம்போல் எதையும் பேச அனுமதிக்கவேண்டும் என்பதல்ல,நமது கருத்து.

வரைமுறை, ஆளும் கட்சிக்கு மட்டும் இருக்கவேண்டும்—எதிர்க் கட்சிகளுக்குத் தேவையில்லை, என்பதும் அல்ல நம் எண்ணம்.

அவசியம் தேவை! கண்ணியமும், கட்டுப்பாடுகளை உணர்ந்து செல்லும் பண்பும், அரசியல் கட்சிகள் யாவுக்கும் தேவை. எதிர்க் கூடாரத்திலிருந்தாலும் சரி, ஆளும் அவையைச்சேர்ந்ததாயிருந்தாலும் சரி, இந்தக் குணங்கள் எவருக்கும் இருக்கவேண்டும். அப்போதுதான் ஆள்வோரும், ஆள்வோரைக் கண்காணிக்கும் எதிர்க்கட்சியும் நாட்டுக்கேற்ற நன்மைகளைச் செய்ய இயலும்.

ஆனுல், நமது காங்கிரஸ், எதிர்க் கட்சிகள் என்றாலே, ஏதோ ஒரு பழி கூறி, தொலைத்துவிடவே எண்ணுகின்றனர். இல்லையென்றால், மானநஷ்ட வழக்குத் தொடரும்படி தேபர் யோசனை கூறியிருக்கமாட்டார்! குற்றப் பட்டியல்கள் எதிர்க் கட்சியினர் சமர்ப்பிக்கிறார்கள் என்றதும், ஒரு உயர்தர—கட்சி சார்பற்ற விசாரணை சபையை அமைத்து, அதன் முன்னிலையில், பகிரங்கமான விசாரணை நடைபெற்று, விபரங்களை மக்களும் அறியும் வாய்ப்பை உண்டாக்கி, ஆள்வோர் மாசைத் துடைத்துக் கொள்ளவேண்டும்—பிறகு, மானத்துக்கு நஷ்டம் கோருவதும் கோராததும் அவர்களிஷ்டம்! ஆனுல், நமது காங்கிரஸ்மேலிடம், அப்படிச் செய்யுமாறு, தாக்கீது பிறப்பிக்கவில்லை. பஞ்சாப் முதலமைச்சரின் விசாரணையை ஏற்று, உடனே, 'எதிர்க்கட்சியினர்மீது வழக்குத் தொடருக' என்கிற யோசனையை வழங்கியிருக்கிறார்கள்.

பஞ்சாப்பில், தினசரி, அறப்போர் நடைபெற்று வருகிறது—எதிர்க் கட்சிகள் ஈடுபட்டிருக்கின்றன, இந்த உரிமைப் போரில். இப்போது, இப்படி ஒரு யோசனையைத் தருகிறது, தேபர் தலைமை!

நல்லறிவாளர், திகைக்கத்தான் செய்வர்—வளரும் காங்கிரஸ் பாசிசம், எந்தளவுக்கு அக்கிரமப்பாதையில் சென்று கொண்டிருக்கிறதென்பதை, அறியும்போது.

பஞ்சாப் மக்கள், தமக்கென ஒரு மாகாணம் வேண்டுமெனக் கிளர்ச்சி செய்து வருவதால், எதிர்க் கட்சியினரின் குரல் வலுவடைந்து வருகிறது! எனவே, நேரடியாகத் தாக்குதல்—சிறைவாசம்—தடியடி என்பது மட்டுமல்லாது, குறுக்குவழியிலும், அவர்களில் சிலரை அலைக்கழிக்க எண்ணுகின்றது, ஆதிக்கக் கட்சி.

பஞ்சாப்பில் மட்டுமல்ல, இங்கும், நாம் ஏதாவது அறப்போர் துவங்கினுல் இப்படியெல்லாம், குறுக்கு வழிகள் தேடப்படுவதுண்டு—சட்டத்தின் மூலம், நம்மைப் பூட்ட. இப்படிக் குறுக்கு வழிகளால், கோலோச்ச எவ்வளவோ, முயன்ருன் வெள்ளையன்! எப்படியெப்படியோ—வளைத்து வீழ்த்த முயன்ருன், சுதந்திர இயக்கத்தை. வென்றவன், அவனல்ல! அறிவர், நமது ஆதிக்க ஆசையினர். ஆயினும், செல்லுகின்றனர், அந்த வஞ்சகப் பாதையில். அதன் ஒரு சின்னம் தான், 'எதிர்க்கட்சிகளை' மிரட்ட, அவைகள்மீது, மானநஷ்ட வழக்குப் போடும் படி சொல்லும், சிபார்சு. ஆட்சி, எவ்வளவு அழகானவர்களிடம் சிக்கிவிட்டது! அந்தோ, ஜனநாயகமே!!

★

அது நடக்காது!

தேசீயம்:— இனி ஒரு பயலும் வாயாடமுடியாது! ஒரு வார்த்தை கேவலமாப் பேசமுடியாது. காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் பரிசுத்தப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கத் திட்டம் தயாராகிவிட்டது.

யூகம்:— என்ன திட்டம் தேசியம்! என்ன புதுத் திட்டம்?

தேசீயம்:— இனி, ஜாதிகளின்பேரால் தலைவர்கள் ஆகிறவர்கள், ஜாதிச் சங்கங்களிலே இருப்பவர்கள், அதன் நடவடிக்கைகளிலே கலந்துகொள்பவர்கள், இவர்களுக்கெல்லாம், காங்கிரசிலே இடம் கிடையாது. ஆமாம், கண்டிப்பான உத்தரவு பிறந்துவிட்டது.

யூகம்:— அப்படியானுல், நம்ம S. S. இராமசாமி படையாச்சியின் கதி? மந்திரி வேலை?

தேசீயம்:— அவருக்கென்ன! இனி ஜாதிச் சங்கத்துடன் சேரமாட்டார். அந்தக் கூட்டங்கள், மகாநாடுகள் இதிலே கலந்து கொள்ளமாட்டார்—கலந்துகொள்ளக்கூடாது.

யூகம்:— அதென்ன தேசியம், அவ்வளவு சுலபமாச் சொல்லி விட்டே. அவர், தான், மந்திரியாகி இருப்பதே, வன்னிய சமூகத்துக்கு நன்மைகள் செய்ய, உரிமைகளைப் பெற என்று பட்டவர்த்தனமாகப் பேசி வருகிருரே.

தேசீயம்:— இனி அப்படிப் பேசக்கூடாது.

யூகம்:— மந்திரி வேலை போனுலும் போகட்டும், விட்டுவிடவேண்டிய அவசியம் வந்தாலும் சரி, விட்டுவிடறேன், ஆனுல், ஜாதிப் பட்டத்தைமட்டும் விடமாட்டேன்னு பேசினுர்...

தேசீயம்:— முன்னே! இனி, அப்படி எல்லாம் பேசமாட்டார்!

யூகம்:— பேசினு...?

தேசீயம்:— மந்திரி வேலை போய்விடும்!

யூகம்:— ஆரூடம் சொல்றயா?

தேசீயம்:— இல்லை, அரசியல் பேசுகிறேன், அரசியல்,

யூகம்:— போங்க தம்பி, உங்க அரசியலும் நீங்களும். அவர் எப்போதும்போலத்தான் வன்னிய சங்கத்தோட தொடர்பு வைத்திருக்கப் போருரு, நீங்க வாயை மூடிக்கிட்டுத்தான் இருக்கப் போறிங்க.

தம்பி,

ஆவடியில் நடைபெற்ற காங்கிரசின் அலங்காரத்தைக் கண்டதாலே சொக்கிப் போனேன்! அங்கு நேரு பண்டிதரை, பலாப் பழத்தை ஈ மொய்ப்பதுபோலத் 'தலைவர்கள்' மொய்த்துக்கொண்டிருந்தனர், மோட்டார்கள்மட்டும், இதுவரை யாரும் பார்த்திராத அளவு அங்கு! ஏ! அப்பா! அப்படிப்பட்ட ஒரு மகாநாட்டை இதுவரை யாரும் கண்டிருக்கமுடியாது. லலிதா பத்மினியின் நாட்டிய நாடகமென்ன, வேறு பல கலா நிகழ்ச்சிகள் என்ன — நேர்த்தியான காட்சிகள், மிக நேர்த்தியான காட்சிகள்! அப்படிப்பட்ட மகத்தான செல்வாக்கை எதிர்த்து வேலை செயய முடியுமென்று எண்ணுகிறீர்களே, அப்பாவிகளே! முடிகிற காரியமா!–

இவ்விதம் சில காங்கிரஸ்காரர் பேசுவதுபற்றிக் குறிப்பிட்டு எழுதி இருக்கிறாய்; தம்பி! நீயேகூட, ஆவடியால் ஓரளவுக்கு மயக்கமடைந்திருக்கிறாய் என்று தெரிகிறது, இது சகஜமும்கூட!

இன்று காங்கிரஸ், சர்க்கார்! எனவே, எப்போதும் சர்க்காரின் தயவினாலே, சொத்து சுகம் ஆகியவற்றைக் காப்பாற்றிக்கொள்ளவும் அதிகமாக்கிக்கொள்ளவும் விரும்பும் 'கனதனவான்கள்' யாவரும், அங்கு சென்று, கட்டியம் கூறி நின்றனர். அதனாலே, அங்கு பெரிய திருவிழா! அதைக் கண்டு சிலர் சொக்கிவிடுவதும் சகஜந்தான்! ஆனால், இலட்சியத்துக்காகப் போரிடும் யாரும், இத்தகைய திருவிழா கண்டு மயக்கமடைந்துவிடமாட்டார்கள்!

தம்பி! எங்கள் ஊர் 'கருடசேவை' உற்சவத்துக்கு இலட்சக்கணக்கிலே மக்கள் வருகிறார்கள்! கும்பகோணம் மகாமகம், மதுரை சித்திரைத் திருநாள், திருவண்ணாமலை தீபம், திருமலை புரட்டாசி, தில்லை ஆருத்ரா—இப்படி இருக்கிறது ஒரு பெரிய பட்டியல்! இதிலே கூடும் மக்கள், இலட்சக்கணக்கில்! இவைகளைக் கண்ட பிறகும், ஆண்டுதோறும் இவை நடைபெற்றுக்கொண்டிருப்பது தெரிந்தும்தான், சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்டது என்பதை மறந்துவிடாதே! இவ்வளவு இலட்ச இலட்சமாக மக்கள் தேர் திருவிழாவுக்குக் குவியும்போது, சுயமரியாதை இயக்கம் நடத்துவதாலே பயன் என்ன என்று ஆயாசப்படுவது சரியல்ல — இவ்வளவு கோலாகலமான திருவிழாக்கள் நடைபெற்றும், சுயமரியாதை இயக்கம் எழுவது தடைப்படவில்லை! அதை எண்ணிப் பார், உண்மை விளங்கும். இலட்சக்கணக்கான பொருள் செலவிட்டு, இரசமான விழாக்களை நடத்துகிறார்கள். தங்க மயிலில் தகப்பன்சாமி வருகிறார்! தையல்நாயகியோ தங்கப் பல்லக்கில்! வெள்ளித் தேர்! தங்க ரிஷபம்! பொற்கவசமிட்ட கருடன்! இப்படிக் கண்ணுக்குக் கவர்ச்சிகள்! வேதகோஷ்டிகள்! பஜனைக்கூட்டங்கள்! பக்தர்கள், வெள்ளம்போல்! சீமான்கள், சீமாட்டிகள்! சேல்விழி, சுழற்கண்; குழலழகி, குயிலி, இப்படிப்பட்ட பட்டாளம் பவனி வரக் காண்கிறோம். அமெரிக்காவில் ஆறு ஆண்டு, இங்கிலாந்தில் ஏழாண்டு, சென்ற மாதம் ஜெர்மனி, இப்படி மேல்நாடுகள் சென்று திரும்பிய மேதாவிகள் கலந்து கொள்வதைக் காண்கிறோம். கவர்னரின் காரியதரிசி, சர்க்காரின் பிரதம என்ஜினியர், டாக்டர், பிரபல வக்கீல், உயர்நீதி மன்றத்தின் அதிபர் — இப்படிப்பட்ட பதவியாளர்களைக் காண்கிறோம். ஆடை அணிகள், அலங்காரங்கள் அமோகமாக! நாத வெள்ளம்! வாணவேடிக்கை! —இவ்வளவும் இருந்திடக் காண்கிறோம். எனினும், இவைகளாலே நாம் மயக்கமடையவில்லை, சொக்கிப் போகவில்லை, சோர்வுகொள்ளவில்லை, கும்பலோடு கோவிந்தா போட்டுவிடவில்லை, இவைகளைக் காண்கிறோம், என்னே இவர்தம் போக்கு! எரியும் தணலில் கற்பூரக் கட்டியைத் தேடிக்கொண்டிருக்கிறார்களே! என்னே இவர்தம் விசித்திர சித்தம்! என்று எண்ணிக் கொள்கிறோம் – இவ்வளவும் வீண் ஆரவாரம், கவைக்குதவாதவை, என்று எடுத்துக் கூறுகிறோம்— இங்கு சென்றீரே, இன்னவிதமாகத் தொழுதீரே, அங்கு சென்றீரே அந்தத் தேவனை வேண்டிக்கொண்டீரே, வேலழகன் விழாவிலும் வேழமுகத்தான் உற்சவத்திலும் கலந்துகொண்டீரே, அன்பரீர்! கண்ட பலன் இன்னது என விண்டிட இயலுமா? உலகுக்குக் கிடைத்த பலன் இது என எடுத்துரைக்க இயலுமா என்று கேட்கிறோம், திருவிழா சென்று திரும்பியவருங்கூட, அசட்டுச் சிரிப்புடன் — ஆமாம்— ஒரே கூட்டம் — இடியும் இடர்ப்பாடும்தான் கண்டோம் என்று கூறிடக் கேட்கிறோம், சுயமரியாதைப் பணியினைத் தொடர்ந்து நடாத்துகிறோம். ஒரு ஆவடி கண்டு, சொக்கிப்போனவர்கள் பேசுவது கிடக்கட்டும், ஒவ்வோர் தலத்திலும் ஆண்டுக்கோர் ஆவடி நடைபெற்றவண்ணமிருக்கிறது; எனினும், பகுத்தறிவு பரப்பும் பணி பட்டுப் போகவில்லை, வளர்ந்தவண்ணம் இருக்கிறது. உனக்குத் தெரியுமோ தெரியாதோ, இலட்சக்கணக்கான மக்களை இழுக்கும் வைகுண்ட ஏகாதசி, சீரங்கத்தில் 'ரொம்பப் பிரமாதம்' என்கிறார்களல்லவா, அந்த ஏகாதசியின் போது, அந்த ஊரிலே உள்ள சுயமரியாதை இயக்கத் தோழர்கள், ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு என்று நினைவு, இரயில் நிலையத்

துக்கு எதிர்ப்புறத்தில், ஒரு பெரிய ஓவியம் தயாரித்து வைத்திருந்தனர். என்ன ஓவியம் என்று எண்ணுகிறாய். ஏசுநாதர் சிலுவையில் அறைபடும் காட்சி ஒருபுறமும், புன்னை மரத்தில் அமர்ந்து புல்லாங்குழல் ஊதும் கண்ணனிடம், களவாடிய சேலைகளைத் தந்தருளும்படி, கோபிகையர் குளத்திலிருந்தபடி கேட்கும் காட்சி மற்றோர் புறமும்! ஏகாதசி காண வந்தவர்கள், இந்தப் பகுத்தறிவு ஓவியக் காட்சியைக் கண்டு,

அடே!

அடடே!

இதைப் பாரு டோய்!

அட, இப்படித்தான் இருக்கு!

செச்சே! மானத்தை வாங்கித் தொலைக்கிறானுங்க!

இப்படிக் கடவுள் செய்வாரா?

இப்படிச் செய்பவர் கடவுள் ஆவாரா?

இப்படி ஏன் கதை கட்டினார்கள்?

நாம் என்னத்தைக் கண்டோம்!

என்று அவரவர் மனப்பக்குவத்துக்குத் தக்கபடி, பேசிச் சென்றனர்.

ஆவடியில் நடைபெற்ற திருவிழாவைப் பிரமாதப்படுத்திப் பேசுவதாலே, காங்கிரசிலே மலிந்து கிடக்கும் குறைபாடுகளை ஒரேயடியாக மறைத்துவிடவும் முடியாது; ஆட்சியிலே காணக் கிடக்கும் அவலட்சணங்களையும் மறுத்துவிடமுடியாது.

ஒரு ஊரிலே தொடர்ந்து ஒரு பத்து நாளைக்கு நாடகம் நடைபெற்றால், அந்த ஊரிலே உள்ள 'சபல புத்தி' படைத்தவர்கள், நடைநொடி பாவனை, உடை உரையாடல் ஆகியவைகளிலே, தங்களையுமறியாமல் நாடகபாணியைக் கலந்துகொள்வார்கள்! ஒட்டுவார் ஒட்டிபோல, நாடகபாணி வேலை செய்யும்—சில நாளைக்கு—பலர் பார்த்துக் கேலிபேசி அதைப்போக்கும்வரையில்!

ஒரு சர்க்கஸ் கம்பெனி வந்துவிட்டால்போதும், அந்த ஊரில் உள்ள வாலிபர்களுக்கு, உடலிலே 'காயம்' ஏற்பட்டேவிடும் — உயரத் தாண்டுதல், தாவிக் குதித்தல், சைகிள் சவாரியில் வேலை காட்டுவது, இப்படிச் சர்க்கஸ் செய்வதால்!

அதுபோலவே தம்பி, ஆவடி போய்விட்டு வந்தவர்கள், சில நாளைக்கு அந்தப் பாணியில்தான் பேசுவார்கள். பிறகு, நிலைமை அவர்களுக்கும் உண்மையை உணர்த்தும்.

நேருபண்டிதருடைய பிரத்யேகத் திறமையே, இத்தகைய 'சொக்க வைக்கும்' காரியத்தைச் சோர்விலாமல் செய்வதுதான்!

பாண்டுங் மகாநாடு பற்றிப் பத்திரிகைகளிலே பார்த்தாயல்லவா!

இதிலே காட்டிய வர்ண ஜாலங்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகையின் அளவு தெரியுமா என்று கேளுங்கள் காங்கிரஸ் நண்பர்களை!

தலைவர்கள் தங்குவதற்காக இரண்டு பெரிய ஓட்டல்கள் ஒதுக்கப்பட்டன. அந்த ஓட்டல் அறைகளைப் புதுப்பித்து வசதிகளைப் பெருக்க 15 இலட்சம் ரூபியா அதாவது 80 இலட்சத்து 60 ஆயிரம் வெள்ளி (மலாய் நாணயம்) செலவிட்டனர்.

மகாநாட்டுக்காக மொத்தம் 6 கோடி ரூபியா, அதாவது 160 இலட்சம் வெள்ளி இதுவரை செலவாகி இருக்கிறது என்று ஏப்ரல் 9 தேதி மலாய் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இப்படிப் பணத்தை வாரி இறைத்து நடத்தப்படும் மாநாடுகள், பவனிகள், கண் காட்சிகள், இவையாவும், அடிப்படைக் குறைபாடுகளை மக்கள் சில காலம் உணராமல் இருக்கச்செய்ய உதவுமே தவிர, கடைசிவரை காப்பாற்றிவிடாது.

திறமைமிக்க ஓவியனொருவன், பழக் கொத்துத் தொங்குவது போலத் திரையிலே தீட்டித் தொங்கவிட்டிருந்தானாம்! பறவைகள் சில, பழத்தைக் கொத்தித் தின்பதற்காக வட்டமிட்டனவாம்! ஓவியனுடைய கைத்திறனை அனைவரும் பாராட்டத்தானே செய்வர். ஆனால் பறவைகளும் பாராட்டுரை வழங்கினோரும், ஓவியத்திலே கண்ட பழமே போதும் என்று இருந்துவிடமுடியும். பாராட்டுவர், பிறகோ பழச்சுவை தேடி வேறிடம் செல்வர்; பறவைகளேகூடப் பறந்து போகும் பழத்தோட்டம் நோக்கி.

அதுபோலத்தான் ஆவடிகள்!! ஆவடிபோல வேறு எந்தக் கட்சியினாலும் நடத்திக் காட்டவே முடியாது என்பதல்ல. ஆவடி போல விமரிசையாக மாநாடுகள் நடத்தவே கூடாது என்பதல்ல தம்பி! ஆவடி நடத்திக் காட்டிவிட்டு, இத்துடன் திருப்தி பெறுக! இன்னலை மறந்திடுக! இன்பம் பெற்றதாக எண்ணிக்கொள்க! என்று கூறுவது கூடாது என்பதைத்தான் கூறுகிறேன். ஆவடி கண்டேன், ஆனந்தம் கொண்டேன், இனி நான் காவடி தூக்கிஆடிடுவேன், களிப்புச் சிந்து பாடிடுவேன், காங்கிரஸ் கட்சியினருடன் கூடிடுவேன், என்று பேசிடும் போக்கினர் பற்றிக் கவலை கொள்ளாதே. நமக்கென்று ஓர் மகத்தான குறிக்கோள் இருக்கிறது — அதிலே வெற்றி பெறுவதற்காகப் பணியாற்றும் நாம், ஆவடி கண்டு அயரமாட்டோம், பாண்டுங் பசப்புக்கும் பலியாகிவிடமாட்டோம்.

சம்சயம்

அம்மாஞ்சி:- இரயில்வே தொழிலாளர் சங்கத்துக்குத் தலைவராக இருக்கும்படி கிரி அவாளைக் கேட்டாளாம், அவர் சாத்யமில்லைன்னு சொல்லிவிட்டாராமே.

அத்திம்பேர்:- ஆமாம், பேப்பர்லே வந்ததே.

அம்மாஞ்சி:- ஏன், வேண்டாம்னு சொல்றார்?

அத்திம்பேர்:- நான் எதுக்கு, வேறே யாருக்காவது கொடுங்கோ என்கிறார். பெரியவாளோட இல்ட்சணமேன்னோ அது.

அம்மாஞ்சி:- நேக்கு, ஒரு சம்சயம். அவர், ரொம்ப நாளைக்கு நேருஜீ நம்மைச் சும்மா விட்டுவைக்கமாட்டார், ஏதாவது வேலை, பாரதத்திலோ, வெளிதேசத்திலோ கொடுக்கத்தான் போறார், இப்ப நாம் அவசரப்பட்டுண்டு, தொழிற்சங்க வேலையை ஒப்புக்கப்படாதுன்னு எண்ணிண்டார்னு, நினைக்கிறேன்.

அத்திம்பேர்:- போடா போக்கிரி! அப்படி அவர் எண்ணிண்டா, நோக்கென்னடா நஷ்டம், கஷ்டம்.

ஆவடியிலும் பாண்டுங்கிலும், அலங்காரம் கண்டு அன்பர் சிலர் சொக்கிப்போகின்றனர், நாமோ இவ்வளவு ஆவடிகளுக்குப் பிறகும் கூட, அங்கோர் சமயம் இங்கோர் சமயம் என்ற அளவிலாவது, சிலபலர், அரசியலில் இன்று காணப்படும் அவலட்சணத்தையும், வடநாட்டு ஆதிக்கத்தையும், கண்டிக்க முன்வருவது காண்கிறோம், மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கொள்கிறோம்—ஆவடி, அனைவரையுமல்ல, வழி தவறியோர், வழுக்கி விழுந்தோர், வாழ்த்திப் பரிசு பெறுவோர், ஆகியோரைத் தான் சொக்கிடச் செய்கிறதே தவிர, கொள்கையில் உறுதி படைத்த எவரையும் காவடிதூக்கியாக்கிடாது—மாறாக, காவடி தூக்கிடும் போக்கினை அத்தகையோர் கண்டித்த வண்ணம் தான் இருக்கிறார்கள்.

"ஐயன்மீர்! ஆவடி நடத்திக் காட்டினீர், இருபது இலட்சம் செலவிட்டீராம்! உங்களிடம் வசதி இருக்கிறது, செலவிட்டீர்கள்! பாண்டுங் பற்றிப் பேசுகிறீர்கள் பரவசத்துடன். கோடி என்கிறார்கள் அதற்கான செலவு! சரி! ஆனால் இவைகளின் பலனாக, ஏழை கண்டது என்ன? இடர்ப்பாடு எது களையப்பட்டது? எதேச்சாதிகாரமுறை ஒழிக்கப்பட்டதா! இல்லாமை இயலாமை துடைக்கப்பட்டதா! ஓவியத்தில் உள்ள பழக்கொத்து தானே, உங்கள் ஆவடிகள்!' என்று கேட்கிறார்கள், சொக்குப் பொடியால் மயக்கமடையாதவர்கள்.

"இங்கே நடைபெறும் ஆவடியைக் காட்டி, இந்நாட்டிலே செல்வாக்கு எவ்வளவு செழிப்பாக இருக்கிறது காணீர் என்றும், பாண்டுங் காட்டி வெளிநாடுகளில் கிடைக்கும் மகத்தான செல்வாக்கைக் காணீர் என்றும் விளம்பரம் பேசி வருகிறீர்கள் — எனினும் காய்ந்த வயிறுடன் இங்கும், கண்ணீருடன் வெளிநாடுகளிலும், இந்நாட்டு மக்கள் வதைபடுகின்றனர், அதை இம்மி அளவு போக்கவும் இந்த ஆவடிகளும், பாண்டுங்குகளும் பயன்படக் காணோமே," என்று கேட்கின்றனர், திருவிழாக் கண்டு தெளிவை இழக்காதவர்கள்.

பர்மியப் பிரதமர் இருக்கிறாரே நூ, அவர் நேரு பண்டிதருக்கு அத்யந்த நண்பர்!

சமயம் கிடைக்கும்போதெல்லாம் அவர் இங்கு வந்து அளவளாவுகிறார், பண்டிதரும் அந்தப் பக்கம் போகும்போதெல்லாம், நூ வினால் உபசரிக்கப்படுகிறார். பத்திரிகைகள் பத்தி பத்தியாக இந்த 'நேசம்' பற்றிச் செய்திகளைத் தருகின்றன.

ஆசியாவிலே கொழுந்துவிட்டெரியும் பிரச்சினைகளை மட்டுமல்ல, ஆப்பிரிக்காவிலே மூண்டு கிடக்கும் பிரச்னைகளையும் ஒரு சேரத் தீர்த்து வைக்கும் 'அபாரமான' வேலையின் நிமித்தம் கூடினரே, பாண்டுங்கில். அதற்காகப் புறப்பட்டபோதுகூட நேரு பண்டிதர், இரங்கூனில் தங்கி, அங்கு நடைபெற்ற திருவிழாவில், கலந்துகொண்டார். நூவுடன், பண்டிதர் பர்மிய உடையில், சிரித்துப் பேசி மகிழும் சினிமாக் காட்சி போன்ற படம் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. இவ்வளவு நேசம், பாசம், இருக்கிறது இரு தலைவர்களுக்கு. இது தந்துள்ள பலன் என்னவென்று கேட்டுப் பார்த்ததுண்டா, தம்பி! இவ்வளவு தோழமையின் விளைவாக, பர்மா வாழ் நமது மக்களுக்குக் கிடைத்துள்ள உரிமைகள், வசதிகள், சலுகைகள் என்னவென்று கேட்டுப் பார்த்திருக்கிறீர்களா!

"இந்தியர்கள் விட்டுவந்த பிறகு பர்மாவில் அனேக விஷயங்கள் நடந்துவிட்டன. வீடுகளையும் நிலங்களையும் பர்மியர்கள் வந்து ஏற்றுக்கொண்டு அனுபவிக்கத் தொடங்கிவிட்டார்கள். யுத்தம் காரணமாக விட்டுச் சென்ற நிலபுலன்களை, விடுவாசல்களை, சுவான்தார்கள் ஏற்றுக் கொள்ளலாம் என்று சட்டம் இருப்பினும் இரங்கூனில் மட்டும் அது செல்லுபடியாகாது. நகருக்கு வெளியே விஷயம் எப்படியென்றால், வீட்டுக்காரர்களுக்குக் குடித்தனக்காரர்களை வெளியேற்றும் உரிமை சட்டபூர்வமாக மறுக்கப்பட்டது. பார்க்கப்போனால் வீட்டுக் குடையவர்கள் எல்லாரும் இந்தியர்கள்; அதில் வசிப்பவர்கள் பர்மியர்கள். இப்போது இன்னொரு பெரிய கண்ருவி; ஒரு குடித்தனக்காரன் தன் ஜாகையை மற்றொரு குடித்தனக்காரனுக்கு மாற்றிவிடுவான். வீட்டுக்காரன் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக்

இராமா! இப்படியும் பேசலாமா!!

"இராமா! இப்படியும் பேசலாமா! யாரிடமிருந்து அர்ச்சனை கிடைக்க வேண்டுமோ, ஆதரவு கிடைக்கவேண்டுமோ, அவரிடமிருந்தே அல்லவா, கேலியும் கிண்டலும் பிறக்கிறது! ஏன் இந்த அபசாரம் என்று எண்ணிப் பார்க்காமல் பேசிவிட்டாரே! இராதா இராமாயணம் இராமனைக் கேவலப் படுத்துகிறது என்று நாங்கள் முறையிட்டுக்கொண்டிருக்கும் இந்தச் சமயம் பார்த்தா அவர் இப்படிப் பேசுவது!"—என்று இராம தாசர்கள் பிரலாபிக்கும் விதமாக நேரு பண்டிதர் இராம இராஜ்ஜியத்தைக் கிண்டல் செய்து பேசியிருக்கிறார். இராம ராஜ்யம் இராம ராஜ்யம்! என்று ஓயாமல் பேசுவது அவருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை என்று தெரிகிறது. என்ன பிரமாதமான காரியம் சாதித்து விட்டான் இந்த இராமன்! ஒரு பெரிய பிரம்மாண்டமான இராஜ்ஜியத்தைக் கட்டிக் காத்து, மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றி, பகை எழாதபடி பரிபாலித்திடவேண்டிய நிலைமை இராமனுக்கு எங்கே வந்தது? ஏன் இவர்கள், இராம இராஜ்ஜியத்தைப் பற்றி இப்படி வாய் வலிக்கப் புகழ்கிறார்கள்? என்றெல்லாம் நேரு பண்டிதருக்குத் தோன்றுகிறது. இராமனுக்கு இருந்த பிரச்னை, இராம இராஜ்ஜியத்திலே இருந்த நிலைமை, சாமான்யமானது; இப்போதிருக்கும் பிரச்னை பிரம்மாண்டமானது, பல புதுமைகள் நிரம்பியது, இதைப் போய் இராமர் காலத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறீர்களே, உங்களுக்கென்ன உலகம் இருக்கிற நிலைமையே தெரியவில்லையா என்று இடித்துரைக்கத் துடிக்கிறார். ஆனால், வெளிப்படையாகப் பேசினால் பாமரர் பகைத்துக்கொள்ளக்கூடும், இந்துமகாசபையினர் எதிர்ப்புக் கிளப்பக்கூடும், பாகவதர்களும் பக்தர்களும் படை எடுக்கக்கூடுமல்லவா!! அதனால், நேரு பண்டிதர், நாசுக்காக, இராம ராஜ்ஜியத்தைக் கிண்டல் செய்கிறார்.

"சுதந்திரத்திற்குப் பிறகுகூட இராம இராஜ்யத்தை ஏற்படுத்த சர்க்கார் தவறி விட்டதாகச் சிலர் கண்டிக்கிறார்கள், ஆனால், இராமன் ஆண்டகாலத்தில் ஜனத்தொகை இவ்வளவு அதிகமாக இருக்கவில்லை என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். இன்று ஜனத்தொகை ஏகமாக உயர்ந்திருக்கிறது; ஆனால், நிலப் பரப்பு முன்பு எவ்வளவு இருந்ததோ அப்படியேதான் இருக்கிறது!" என்று புதுடில்லியில் மே 23ல் பேசியிருக்கிறார். இப்படி நாசுக்காக இராம இராஜ்யத்தைக் கிண்டல் செய்துவிட்டு, இவ்விதமான புராண மனப்பான்மை கூடாது என்று இடித்துரைக்க எண்ணி, பண்டிதர், "இந்தியாவிலுள்ள ஆண்களும் பெண்களும் இந்த அணு யுகத்தில் விஞ்ஞான ரீதியில் மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும்" என்று அறிவுரை தந்திருக்கிறார். நேரு பண்டிதருமா, இராம தூஷணை செய்ய வேண்டும், ஹே! இராமா! இப்படியும் ஒரு காலம் வரலாமா! என்று இராம தாசர்கள் ஆயாசப்படுகிறார்கள்.

கொண்டிருக்க வேண்டும். ஒன்றும் சொல்வதற்கில்லே, அட, வீடேவேண்டாம், நிலமே வேண்டாம், விற்றுவிட்டுப் போவோம் என்ருலும் இன்னெரு சட்டம் இருக்கிறது. பர்மியப் பிரஜைக்குத் தவிர வேறெவனுக்கும் ஸ்தாவர சொத்துக்களே விற்பனே செய்யவோ அடமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ, அனுமதி கிடையாது. இந்தியரிடம் விலேக்கு வாங்கவும் பர்மியர் எவரும் தயாராக இல்லே. இதனுல் அங்கு அடமானத்தில் கடன் வாங்கியுள்ள இந்தியர்கள்கூட தங்கள் ஸ்தாவர சொத்துக்களேக் கடனுக்கு ஈடாக மாற்றிக்கொள்ள இயலாத ஒரு நிலேயில் செய்வதின்னதென்றறியாமல் இருக்கிருர்கள். சுதந்தர அரசியல் சட்டப்படி உத்யோகங்கள் இனி பர்மியர்களுக்கே என்று ஆகிவிடவே, அனேகர் வேலே இழக்கும் திண்டாட்டத்திலும் சிக்கியிருக்கிருர்கள்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்த மாதிரி ஒரு புதிய பெரிய மசோதாவையும் பர்மியப் பார்லிமெண்டு கொண்டுவந்துநிறைவேற்றியிருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டிராத நிலச்சுவான்தார்களின் நிலங்களே எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டு விடுவது என்பதே இதன் சாராம்சம். விவசாயிகளாக இருந்தால் தலா ஐம்பது ஏக்கர் வைத்துக்கொள்ளலாம். இங்கே சுமார் ஐயாயிரம் இந்தியர் வரை 26 இலட்சம் ஏக்கராவுக்குச் சொந்தக்காரர்கள். அதன் பெறுமானம் நாற்பது கோடிவரை மதிக்கப்படலாம். பர்மிய விவசாய மந்திரி சட்டதிட்டமாக, நிலம் எல்லாம் ராஜ்ய சர்க்காருக்கே சொந்தம். நிலச்சுவான்தாரருக்கு அதை வைத்துக்கொண்டு அதில் சாகுபடி செய்வதற்கு மட்டுமே உரிமை இருக்கிறது. சர்க்கார் உசிதம்போல் இந்த ஏற்பாட்டை ஒழுங்கு செய்யவோ, மாற்றவோ, ரத்துசெய்யவோ, உரிமை பெற்றது..........என்ருர்.

பொதுவாக இந்தியர் நிலேமைதிருப்திகரமாக இல்லே என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் அன்னிய நாட்டினராகவே மதிக்கப்படுகிருர்கள்; வருமானம் மிகவும் குறைவு. ஆகையால் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகிறது; எனவே பர்மியரிடையே அந்தஸ்து என்பது அவர்களுக்கு அதிகம் இல்லே.’’

தம்பி! பர்மாவில் உள்ளவர்களில் தமிழரே அதிகம். பர்மாவில் இன்றுள்ள நிலேமை இது. அறுபது நாட்களில் ஐந்து நாடுகளேச் சுற்றிவிட்டுவந்த ஆனந்த விகடன் எழுத்தாளர் ஒருவர் தீட்டியதைத்தான் தந்திருக்கிறேன்.

இத்தனே இன்னலுக்கு ஆளாகி இருக்கிருர்களே, இங்கிருந்து சென்றவர்கள், நேரு பண்டிதருக்கு பர்மிய முதல்வரிடம் உள்ள நேசமும் பாசமும் என்ன பலன் கொடுத்திருக்கிறது! நேரு பண்டிதரைக் காணும் போதே, பர்மிய முதல்வரின் முகம் மலருகிறது, கட்டித் தழுவிக்கொள்கிருர், ஆசியாவின் வழிகாட்டி நீரே, என்று உபசாரம் பொழிகிருர், விருந்து நடத்துகிருர், ஆனுல், தன் சொந்த நாட்டுப் பிரச்சினே எழுகிறபோது, இந்த நேசமும் பாசமும் ஓடி ஒளிகிறது, பர்மியரின் உரிமைக்காகவே பணியாற்றுகிருர். எமது பண்டிதருக்குள்ள செல்வாக்கினேப் பாரீர், அவர், செக்கு மாடென உழைத்திடுவீர், செல்வம் கொழித்திடச் செய்திடுவீர், அதை டாடாவும் பிர்லாவும் செல்லாக அரித்தாலும் சீறி எழாதீர் என்று கூறினுலும் அதுதான் சோஷியலிசம் என்று எண்ணிப் பூரித்திடுவீர் என்று பேசுகிருர்கள். ஒரு நாட்டின் தலேவருக்கு வேருேர் நாட்டிலே அபாரமான செல்வாக்கு இருக்குமானுல், செல்வாக்குள்ள தலேவரின் நாட்டவருக்கு அந்த வேற்று நாட்டிலே, மதிப்பு உயரும், வசதிகள் கிடைக்கும், சலுகைகள் கூடப் பெற வழி ஏற்படும். இவர்களோ, பர்மாவில் பண்டிதருக்கு மிகுந்த செல்வாக்கு என்று பண் இசைக்கிருர்கள், அங்கோ ‘பாரத மக்கள்’ ஆலாய்ப் பறக்கிருர்கள் என்று ஆனந்தவிகடனேச் சேர்ந்தவரே ஆயாசத்துடன் கூறுகிருர். பண்டிதரின் செல்வாக்கின் பொருள்தான் என்ன!!

ஆவடி காட்டியும் பாண்டுங் பற்றிப் பாராட்டிப் பேசியும் தென்னுட்டவர் காணும் பலன் என்ன? காவடி தூக்கித் திரியவேண்டி இருக்கிறது, எதற்கும், எப்போதும்!

டில்லி நிதிமந்திரி தேஷ்முக் நாமெல்லாம் ஏதோ விளக்கமறியாதார் என்ற எண்ணத்தோடு பேசுகிருர். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே வடநாட்டுக்கே அதிகத் திட்டங்கள் செய்து தரப்பட்டன என்று குறை கூறுகிருர்கள்—ஏன் அப்படிச் செய்ய நேரிட்டது என்ருல், திட்டம் முதலில் வடநாட்டுக்காகத் தீட்டினேும், என்கிருர். இது சமாதானம் என்று அவர் கருதுகிருர்! அவ்வளவு பெரியவர் சொல்கிருரே என்பதற்காக இங்குள்ள அடிவருடிகளும், ‘ஆமாம் சாமி’ போடுகிருர்கள். திட்டம் தீட்டும்போது, ஏன் வடநாட்டின் கவனம் மிகுந்திருந்தது, தென்னுடுபற்றி ஏன் அக்கரையற்ற போக்கு, அலட்சியம் ஏற்பட்டது என்பதற்கு அவரும் காரணம் கூறவில்லே, இங்கு உள்ளவர்களும் கேட்கக் காணேும். உங்களுக்கு இரண்டாவது பஞ்சி

<u>ஊரார் உரையாடல்</u>

அந்த வேலே போகவே......!

அம்மாஞ்சி:– ஆச்சாரியார், அமெரிக்காவிடமிருந்து நாம் பண உதவி பெறக்கூடாது—ஆபத்து, கேவலம் என்று கண்டிக்கிருராமே?

அத்திம்பேர்:– ஆமாம்.

அம்மாஞ்சி:– அமெரிக்காவிடமிருந்து பண உதவி எப்போதிருந்து வாங்கிக்கொள்கிருர்கள்?

அத்திம்பேர்:– பல வருஷங்களாக.

அம்மாஞ்சி:– ஏன் ஆச்சாரியார் முதலிலேயே இதைக் கண்டிக்கவில்லே?

அத்திம்பேர் :– அவருக்கு அதை கவனிக்க நேரமில்லே. அப்போது வேறு வேலேயாக இருந்தார்! மந்திரி வேலே பார்த்துக்கொண்டிருந்தாரல்லவா!

அம்மாஞ்சி:– மந்திரி வேலே போய்விடவே, இப்போது இந்த வேலேயில் இறங்கிவிட்டார் என்று சொல்லுங்கள்!

அத்திம்பேர்:– போடா குறும்புக்காரா! பெரியவாளேப்பத்தி அப்படி எல்லாம் பேசாதே.

யிலே சாப்பாடுபோடப்படும் என்று விருந்து சாப்பிட்ட 'தெம்பில்' ஏப்பம் விட்டபடி தேஷ்முக் பேசுகிறார், இங்குள்ள 'பிக்ஷாந்தேஹி' களும், ஏதோ, பின்கட்டில் உட்கார வைத்துப் போட்டாலும் பரவாயில்லை, பசி, வயிற்றைக் கிள்ளுகிறது என்று கூறுகிறார்கள்!! இதுதானே ஆவடி தந்த அந்தஸ்து!

'பிக்ஷாந்தேஹி' என்று நாம் சொன்னால், காங்கிரஸ் நண்பர்களுக்குக் கோபம் கொதித்தெழுகிறது, ஆஹா! எங்களையா பிச்சைக்காரர்கள் என்று ஏசுகிறீர்கள், என்பார்கள். மைசூர் ராஜ்ய முதலமைச்சர் பேசியிருக்கிறார் இதுபோல!! டில்லி சர்க்காரின் போக்கை மைசூர் சட்டசபையில், மிக வன்மையாகக் கண்டித்துப் பேசுகிறார்! டில்லி, தென்னாட்ட வரை, தலைவர்களை, அவர்களை இங்கு நாம் படேல் என்று புகழ்ந்தாலும் சரி, திலகர் என்று கொண்டாடினாலும் சரி, அவருக்காகக் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு மேலே விழுந்து வேலை செய்தாலும் சரி, அவர் மேனியில் துளி தூசி பட்டாலும் என் கண்ணிலே மிளகாய்ப்பொடி விழுவது போல இருக்கிறது என்று உருகி உருகிப் பேசினாலும் சரி, அவருடைய ஆட்சியை ஆதரிப்பதையே என் தவமாகக் கொண்டுவிட்டேன், என்று பேசிப் பணியாற்றி வந்தாலும் சரி, எப்படிப்பட்ட செல்வாக்கை இங்கே பெறக் கூடியவராக இருந்தாலும், அந்தத் தலைவர்களை அங்கு பிச்சைக்காரர் போலத்தான் நடத்துகிறார்கள் என்பதை உணர்ந்து சற்றுக் கோபமாகவே பேசுகிறார்.

"மத்திய சர்க்காரிடம் நாம் செல்லும்போதெல்லாம், நாமும் நமது யோசனையைக் கூறவேண்டும்; ஏதோ பிச்சைக்காசு வாங்கப்போகும் போக்கிலே நடந்துகொள்ளக் கூடாது"

என்று இடித்துரைக்கிறார். இதன் பொருள் விளக்கமாக இருக்கிறதே, தம்பி, ஏன் காங்கிரஸ் நண்பர்களுக்கு மட்டும் விளங்கவில்லை. டில்லியில், தென்னகத்துத் தலைவர்களைப் பிச்சை வாங்க வருபவர்களை நடத்துவதுபோல நடத்துகிறார்கள் என்பதைத் தோழர் அனுமந்தய்யா, தனியானதோர் பாணியில் எடுத்துரைக்கிறார்.

"அவ்வப்போது, கடன் வேண்டும், மானியம் வேண்டும் என்றெல்லாம், மத்ய சர்க்காரிடம் கெஞ்சிக் கேட்டபடி இருக்கவேண்டிய நிலைமை இருப்பது, சட்டதிட்டத்தின் படியோ, ஒழுக்க முறைப்படியோ கூடச் சரியல்ல! இப்போதுள்ள நிலைமை எப்படி இருக்கிறதென்றால், மத்திய சர்க்கார் ஏராளமான 'வசதிகளை'க்குவிந்து வைத்துக்கொண்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு இராஜ்ய சர்க்காருக்கே உரிமையான தான விஷயங்களில்கூட இப்படிச் செய்யுங்கள், அப்படிச் செய்யுங்கள் என்று வற்புறுத்துகிறது. கடன் தருகிறேன் மானியம் தருகிறேன் என்று ஆசைகாட்டி!!

தன்னிடம் உள்ள ஏராளமான 'வசதிகளை' வைத்துக்கொண்டு, மத்திய சர்க்கார், மெள்ளமெள்ள, ஆனால் வெற்றிகரமாக, இராஜ்ய சர்க்காரின் நடவடிக்கைகளிலே புகுந்து ஆதிக்கம் செலுத்துகிறது.

மத்ய சர்க்காரின் போக்கு எப்படி இருக்கிறது என்றால், அமெரிக்கா, பணம் கடனாகவும் இனாமாகவும் கொடுத்துத் தன் ஆதிக்கத்தை இங்கும் வேறு பல நாடுகளிலும் புகுத்துகிறதே, அதுபோல இருக்கிறது."

தம்பி! இவ்வளவும் கூறுபவர், வகுப்புவாதி அல்ல; விஷமி அல்ல, பிற்போக்குவாதியல்ல, காங்கிரஸ்காரர்தான்! ஆனால் இவருக்கு முதுகெலும்பு இருக்கிறது, வடநாட்டுத் தலைவர்களுக்கு வால் பிடித்தால்தான் நமது அரசியல் வாழ்வு ஒளிவிடும் என்ற அடிமைப் புத்தி இல்லை. ஆகவே அஞ்சாமல் நிலைமையைக் கூறுகிறார். ஆவடி பார்! அதன் அற்புதம் கேள்! என்று தெம்மாங்கு பாடிக் காட்டினாலும், காவடி தூக்கித் திரியும் நிலைக்குத் தென்னாடு வருவது கண்டு, மனம் வெதும்பிப் பேசுகிறார்.

பிச்சைக்காரரை நடத்துவது போல நடத்துகிறார்கள்.

இராஜ்ய விவகாரங்களிலே நுழைந்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

அமெரிக்கா பணத்தை வீசி, பல்லிளிக்கச் செய்து தன் படைவீடாகப் பல நாடுகளை அமைத்துக் கொள்வதுபோல, டில்லியும் செய்கிறது.

இவ்வளவு குற்றச்சாட்டுகளை ஏவுகிறார் தோழர் அனுமந்தய்யா!

ஆவடிகள் நடத்துவதால் கிடைக்கும் பலன் இதுதானே, தம்பி! வேறென்ன!!

திருவிதாங்கூர்-கொச்சியில் முதலமைச்சராக முன்பு இருந்த தோழர் கேசவன் என்பவர், ஓரிரண்டு திங்களுக்கு முன்பு மலாய் நாடு சென்றார். கோலாலம்பூரில், மலையாளிகள் அவருக்கு வரவேற்பும் விருந்தும் நடாத்தினர். அங்கு அவர் பேசியது, என்ன தெரியுமா!! ஆவடியின் பெருமையைப்பற்றியும்

ஒட்டு-மை

ஒற்றுமை, ஒற்றுமை என்று பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது, ஆனால், இந்திய பூபாகத்தில் அது நடைமுறை! உண்மையாக இல்லை; இருக்கமுடியவில்லை. பல்வேறு இனங்களும், கலாச்சாரங்களும், ஒரு சிலருடைய உபசார மொழியினாலே, ஒன்றுபட்டு, ஒருருவாகிவிடமுடியாது; ஒற்றுமை, வெறும் ஒட்டு மையாகத்தான் இருக்கிறது. இதை விளக்கிடும் சம்பவம், நெடுந் தொலைவிலுள்ள கெனியா நாட்டிலேயும் நடைபெற்றிருக்கிறது. ஆபிரிக்காவிலுள்ள கெனியாவில், இந்திய பூபாகத்திலிருந்து சென்று குடி ஏறினோரும், தங்கி இருப்போரும், உளர். இரண்டாண்டுக்கு முன்பே, முஸ்லீம்கள், நாங்கள் தனி இனம், தனிப் பண்பாடு உள்ளவர்கள், எங்களை இந்துக்களுடன் சேர்த்து ஒரே பட்டியலின்கீழ் கொண்டுவருவதை ஏற்றுக்கொள்ளமுடியாது, என்று கூறிக் கிளர்ச்சி செய்து, தனித் தொகுதி முறையையும் பெற்றுவிட்டனர். இந்து-முஸ்லீம் ஏக் ஹோ! ராம்-ரஹீம் ஏக் ஹோ! என்ற கோஷமெல்லாம், பலன் தரவில்லை. இப்போது அங்கே உள்ள **சீக்கியர்கள், நாங்கள் இந்துக்கள் அல்ல,** எங்கள் பண்பாடே தனி, எங்கள் மார்க்கம் தனியானது, எங்கள் எண்ணமும் ஏற்பாடும் இந்துக்களுடையது போன்றதல்ல, எனவே எங்களை இந்துக்களின் தொகுப்பிலே சேர்க்கக்கூடாது ஆட்சி மன்றங்களிலே எங்களுக்குத் தனியாக இடம் வேண்டும்; என்று கூறிவிட்டனர். சீக்கியர்களின் போக்கு இப்படி ஆகிவிடக்கூடாது என்பதற்காக, கெனியாவில் உள்ள இந்தியர் காங்கிரசுக்கு, சென்ற ஆண்டு, ஒரு சீக்கியரைத் தலைவராக அமர்த்தினர். எனினும், பலன் கிடைக்கவில்லை!

அலகாபாத்பண்டிதரின் அளவற்ற செல்வாக்கைப்பற்றியுமா? இல்லை, இல்லை! டில்லியின் மாற்றாந்தாய்ப் போக்கைக் குறித்துத்தான் பேசினார். தாயகத்திலிருந்து வந்த தலைவரை, வாழ்த்தி வரவேற்று, ஏதோ நாங்கள்தான், பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டு, இந்தக் கண்காணாச் சீமைக்கு வந்து சேர்ந்தோம், அங்கே தாயகம் தளைகள் ஒடித்தெறியப்பட்ட நிலையில் தன்னரசு நடாத்துகிறதே, தரணி எங்கும் பரணி பாடி வரும், நேரு பண்டிதரின் ஆட்சி நடக்கிறதே எப்படி இருக்கிறது, தாயகம்; இன்பம் வழிந்தோடவேண்டுமே என்று கேட்கிறார்கள்; தோழர் கேசவன், முன்னாள் முதலமைச்சர், அதையா கேட்கிறீர்கள் அன்பர்களே! என்று கூறிப் பெருமூச்செறிகிறார்.

"நாங்கள் புதிய கைத்தொழில்களைத் தொடங்க இடையறாது மத்திய சர்க்காரின் உதவியை நாடி வந்திருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு புதிய கைத்தொழிலும் வட இந்தியாவிலேயே தொடங்கப்படுகிறது. பிரம்மாண்டமான பெட்ரோல் சுத்திகரிப்பு நிலையம் தற்போது, பம்பாய்க்கு அருகேயுள்ள டிரோம்பேயில் அமைக்கப்பட்டு வருவதையும், மண் ஆராய்ச்சிப் பாக்டரியும் அப்பகுதியில் அமைக்கப்படுவதையும்இதற்குஉதாரணமாகக் காட்டலாம். மத்ய அரசாங்கம் இத்தகைய மாற்றாந்தாய்ப் போக்கை அனுஷ்டிப்பது கண்டிக்கத்தக்கதாகும்."

தோழர் கேசவன் என்பவரின் பேச்சு, இது!!

கண்டிக்கத்தக்கது என்கிறார், காரணமும் காட்டுகிறார்.

கண்டனம் பிறக்கிறது, அது பரவாதிருக்கத்தான் ஆவடி அலங்காரம் காட்டப்பட்டது.

ஆவடி மூலம், கர்வடி தூக்கிகளாக இருக்க தென்னாடு இசைகிறதா, இணங்குகிறதா, என்பதுதான் பரீட்சை பார்க்கப்பட்டது. இந்தச் சூட்சமத்தைப் புரிந்துகொள்ளாமல், ஆவடியைப் பார்த்தீர்களா, என்று கண்ணையும் வாயையும் அகலத் திறந்துகொண்டு, அன்பர் சிலர் கேட்கிறார்கள், என்ன செய்யலாம் தம்பி! அவர்களின் மன மயக்கம் தெளிய வேண்டும்—அதற்கான முறையில் நாம் பணியாற்ற வேண்டும்.

அன்புள்ள

அண்ணாதுரை.

கிளறாதே!

அம்மாஞ்சி:— நம்ம காங்கிரஸ் தலைவர்களுக்குக் கதை, நாடகம், சினிமா இதெல்லாம் எழுதத் தெரியாதா?

அந்திம்பேர்:— ஏன் தெரியாது—இதை எழுதுவது ஒரு பிரமாதமா!

அம்மாஞ்சி:— அப்படியானால், ஏன் யாரும் எழுதவில்லை?

அந்திம்பேர்:— மண்டு! யாரும் எழுதவில்லைன்னு உனக்கு எந்த ஏமாளிடா சொன்னது. நம்ம 'கல்கி' காலமாயிட்டாரே, காங்கிரஸ்காரர்தானே?

அம்மாஞ்சி:— அதிலே என்ன சந்தேகம்! ராஜாஜிக்கே வலதுகரமாக இருந்தவராச்சே!

அந்திம்பேர்:— ஜெயிலுக்கும் போனார்டா, சத்யாக்கிரகத்திலே ஈடுபட்டு.

அம்மாஞ்சி:— ஆமாம், தெரியுமே. பல காங்கிரஸ் கூட்டங்களிலே அதைப்பத்திப் பேசினா, கேட்டிருக்கேன்.

அந்திம்பேர்:— அசடு? அவர் எழுதியிருக்கார்டா சினிமாக் கதை—தியாகபூமின்னு.

அம்மாஞ்சி:— அப்படியா!!

அந்திம்பேர்:— அதுகிடக்கட்டும், நீ, மலைக்கள்ளன் படம் பார்த்தயேன்னோ!

அம்மாஞ்சி;— ஓ! பார்த்தேனே—

அந்திம்பேர்;— யார் கதைன்னு நினைச்சே! நம்ம ஆஸ்தான கவிஞர், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவளோடயதன்னோ!

அம்மாஞ்சி:— ஆமாம், மறந்து போய்ட்டேன்.

அந்திம்பேர்:— அவர் என்ன காங்கிரஸ்காரரல்லவா! பிரபலமானவராச்சே! நம்ம ராஜாஜிக்கும் வேண்டியவர், போன மாசம் கவர்னர், அவாளுக்குப் பொன்னாடை போத்திப் பாராட்டினா, தெரியுமோ!

அம்மாஞ்சி:— ஆமாமாம்! தலைவர்களிலே ஒருவர்தான்.

அந்திம்பேர்:— முன்ஷி தெரியுமோ, கவர்னரா இருக்காரே...

அம்மாஞ்சி,— ஆமாம், வனமகோத்சவம்!

அந்திம்பேர்:— டில்லியிலே மந்திரியா இருந்தப்போ அவர் ஆரம்பிச்சதுதான் வனமகோத்சவம், அவர் காங்கிரஸ் மூல புருஷர்களிலே ஒருவர் என்கிறதை மறுத்துப் பேசுவயோ?

அம்மாஞ்சி:— அபசாரம்! எப்படி அதைப்போயி மறுக்க முடியும். பெரிய காங்கிரஸ் தலைவர்.

அந்திம்பேர்:— பிரிதிவி வல்லப்னு ஒரு சினிமாப்படம் வந்தது—பிரபலமான படம்—அவர் எழுதின கதைதான்!

அம்மாஞ்சி:— இவ்வளவு இருக்கா! நான் ஒரு மண்டு, இதை எல்லாம் கவனிக்கவேயில்லை.

அந்திம்பேர்.— காங்கிரஸ்காரர் பாவலர்னு ஒருத்தர் உண்டு—காலமாயிட்டார்—அவர் எழுதினது, பதிபக்தி—

அம்மாஞ்சி:— இவ்வளவுபேர், நம்ம காங்கிரஸ்காராள் சினிமாக் கதை எழுதியிருக்கப்போ, இந்த தீனா மூனா கானாக்கள் சினிமாக்கதை எழுதினா, ஏன், நம்மவா, கேவலமாப் பேசிக் கண்டித்துவிட்டு, அரசியல் கட்சியிலே இருக்கிற முக்கியமானவா, சினிமாவுக்குக் கதை எழுதலாமான்னு, கூட்டங்களிலே பேசறா?

அந்திம்பேர்:— போடா, குறும்புக்காரா! இதுக்காகத்தான், என் வாயைக் கிளறினயோ!

குன்றக்குடி சைவம்

குன்றக்குடி அடிகளார், இந்தக் கிழமை அளித்திருக்கும் படையலில், பக்தகோடிகளுக்குச் சிறிதளவு காரம் அதிகம்! நித்த நித்தம் அவர்களோடு பழகுவதால், அங்கு காணப்படும் குறைபாடுகளைக் களைய, இடித்துரைத்தால்தான் பயன்படும் என்று அடிகளார் துணிந்துவிட்டிருக்கிறார் என்று தெரிகிறது. சங்கரநயினர் கோயிலில் அவர் வரவேற்கப்பட்டபோது உபதேசம் அருளினார். அதிலே காணக் கிடக்கும் சில கருத்துகள் இங்கு தரப்படுகின்றன.

திருநீறு பூசினால் இரத்த சோகையா என்று கேட்கும் நாளில், புரியாத மொழியில்தான் அர்ச்சனை செய்யவேண்டுமா?

*

அடிமைப்படுத்துவது ஆயுதத்தால் மட்டுமல்ல, மொழியால் அடிமைப்படுத்தப்படுகிறது.

*

விவிலிய (கிருஸ்தவ) மதத்தினர் சிகப்பு நாடாவுடன் ஆடவரும் கறுப்புத் துணியுடன் பெண்களும் சேவை புரிகிறார்கள். இங்கு காவி உடையுடன் பிச்சைகேட்கும் சாமியார்களைப் பார்க்கிறோம்.

*

நாஸ்திகர்களைப் பற்றிக் கவலையில்லை, ஆஸ்திகர்கள் இடையூறு செய்யாதிருப்பார்களாக!

*

அடிகளார் சமைத்தளிக்கும் இந்தப் படையலில் காரம் சிறிதளவு அதிகம் என்று மெய்யன்பர்கள் கருதக் கூடும்! சேவை செய்கிறார்கள், கிருஸ்தவ அடியார்கள், பிச்சை எடுக்கிறார்கள், காவிகட்டிகள் என்று அடிகளார் கூறுவது உண்மைதான், ஆனால் முழு உண்மை அல்ல!

காவி கட்டிடும் சாமியார்கள் எல்லோருமே கஞ்சிக்கு அலைபவர்களல்ல.

அவர்களில் சிலர், சிவனருளைச் செம்மையாகப் பெற்றவர்கள், "காவி கண்டு கலங்காதே கண்ணே!" என்று இச்சைக்கினிய பச்சைக்கிளியுடன் பேசிடும் பக்குவமான வாழ்வில் இருக்கிறார்கள். "காலை முழுவதும் சைவத்தைச் சுமந்தேன்,கட்டழகி, இப்போது ....!" என்று நட்ட நடுநிசியில் நாமாவளி பாடியிருக்கிறார்கள்!!

கடலும் கணபதியும்!

என்ன காரணமோ தெரியவில்லை, கணபதிக்கு இந்தக் கஷ்டகாலம் வந்திருக்கிறது. சாதாரண கணபதிகூட அல்ல, சந்தான கணபதி!! அப்படிப்பட்ட கணபதியை மூழ்கடித்துவிடக் கடல் கிளம்பி அட்டகாசம் செய்கிறது. நல்ல வேளையாக, கடலிடமிருந்து கணபதியைக் காப்பாற்றிவிட்டார்கள். தனுஷ்கோடியில், முப்பதாண்டுகளுக்குமுன்பு கட்டப்பட்டதாம், சந்தான கணபதி ஆலயம்! இப்போது, கடல் மெள்ள மெள்ள உள்ளே வந்துகொண்டிருக்கிறது; சில நிபுணர்கள், இராமேஸ்வரத்துக்கே ஆபத்து ஏற்படக்கூடும் என்று எச்சரித்துள்ளனர். இப்போது ஆபத்து, கணபதிக்கு வந்துற்றிருக்கிறது, கணபதி கோயிலை விழுங்கிவிடுமளவுக்கு கடல் எழும்பி வரலாயிற்று. உடனே பக்தர்கள், சந்தான கணபதியைக் கோயிலிலிருந்து அப்புறப்படுத்தி, ஓரளவு தொலைவில், உயரமான பகுதியில் அமைந்துள்ள, வரசித்தி விநாயகர் கோயிலிலே கொண்டுபோய் பத்திரமாகச் சேர்த்துவிட்டனர். கணபதியைக் கடல் என்ன செய்ய முடியும்-அவர் துதிக்கையால் இழுத்துக்கொள்வது என்று நினைத்தால், இந்தக்கடலா, சப்த சமுத்திரங்களும் வரண்டே போகுமே என்று 'புண்ய கதை' படிக்கும்போது சொல்கிறார்கள். இப்போது, பாபம், கடல் மிரட்டுகிறது, கணபதி வேறு கோயிலில் குடி ஏறவேண்டி வருகிறது!!

மஞ்சள் அரைத்த இடம்!

விஞ்ஞானரீதியில் மனதைப் பக்குவப் படுத்த வேண்டும் என்று நேருபண்டிதர் கூறுகிறார். இங்கே ஆராய்ச்சியாளர்கள் பெரியவெற்றியைத் தேடிக் காட்டி இருக்கிறார்கள். வடக்கே ஓரிடத்தில், சர்க்காரின் புதை பொருள் ஆராய்ச்சித் துறையினர், மிகச்சிரமப்பட்டுத் தோண்டிப் பார்த்து, யாரோ ஒரு அரசன் அசுவமேதயாகம் நடத்தியது என்று நம்பப்படும், யாகசாலையைக் கண்டுபிடித்துவிட்டார்களாம்!! விஞ்ஞான ரீதியான மனப்போக்கு எப்படிவேகமாக வளருகிறது பார்த்தீர்களா! 3,000,000 ஒளி வருஷங்கள் தொலைவில், ஒரு நட்சத்திரம் இருக்கிறது; அது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இப்போது ஹாப்பர்க் ஆராய்ச்சிக் கழகத்தினர், இந்தப் புதிய நட்சத்திரத்தை, மிகமிக நேர்த்தியான தொலைநோக்கிக் கருவி மூலம் கண்டறிந்துள்ளனர். இந்த நட்சத்திரம், சூரியனைவிட இலட்சக்கணக்கான மடங்கு ஒளி உள்ளதாம்! ஆனால் பூமிக்கும் அதற்கும் இடையே உள்ள தொலைவு, 3,000,000 ஒளி வருஷங்கள்! அப்படி என்றால் பொருள் என்னஎன்று தெரியவேண்டுமல்லவா? ஒரு ஒளிவருஷம் என்றால் 5,880,000,000,000 மைல் என்பதாகும். இது ஒரு ஒளிவருஷத்துக்கு இத்தனை மைல் என்றால், 3,000,000 ஒளி வருஷங்கள் என்று கூறப்படுவதற்கு எவ்வளவு மைல்கள் ஆகின்றன, என்று கணக்கெடுத்துப் பார்க்க முயற்சி செய்யுங்கள்!!

அங்கே, அது!

இங்கே, யாகக் குழியைக் கண்டுபிடிக்கிறார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், புதை பொருள் ஆராய்ச்சித் துறையினர், ஐவருக்கும் தேவி அழியாத பத்தினி எனும் சிறப்புக்குப் பாத்திரமாக இருந்த திரௌபதி, மஞ்சள் அரைத்த இடம் எது என்பதைக் கண்டுபிடிக்க முனைவார்களாக! பாரத நாட்டுக்கிணை பாரதநாடே!!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi St, Kancheepuram